ள் நெ' 15. விலை 2 அணா REGD. NO. 4642

திராவிடநாடு

ர் 12 | 25—10—53 | இதழ் 17

றியாமைக்கு அழிவு எப்போது?

[அடிகள்]

குடிசை வாழ்க்கையை மேற் ாண்டு, இந்நாட்டு மக்களின் சரா வாழ்க்கைகளின் பிரதிபலிப்பாக, ட—உடை—பாவனை அனைத்தி ம் செயல் முறையில் நடந்து காட் அரை நிர்வாண அண்ணல் காந் டிகளுக்கு இலட்சக்கணக்கான பாய்களைச் செலவிட்டு ஒருநினைவு ண்டபம் எழுப்புவது அவசியமா? கிலும், நாட்டின் நாலா பக்கங் ிலும் ஏழ்மை தன் முழுவடிவத் ாடு காட்சியளிக்கும் இந்நாளில், ழைகளின் பாதுகாவலனாய் விளங் அந்த உத்தமருக்கு இப்படி ரு மாளிகை அவசியமா? என்று ம் கேட்டால், நம்மைத் தேச ரோதிகள் என்றும், காந்தியப் ண்பை அறியாதவர்கள் என்றும் ிதாகக் கூறிவிடுவர்.

என்ற போதிலும், சில 'தேச பக் 'களே இத்தகைய கேள்விகளைக் ட்டிருக்கிறார்கள் என்பதை அறி போது, அங்கும் உண்மையை னரும் பக்குவம் பெற்ற சில வது இருக்கின்றனரே என்ற ழ்ச்சி நமக்கு உண்டாகிறது.

"காந்திஜிக்கு இத்தகைய நினை வுச் சின்னம் தேவையா? அவசி யமா? ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கக் கூடிய வேறு பல ல்ல காரியங்களை ஊக்குவிப்பது தைவிட அவருக்கு மெத்தப் பிடித்தசேவையாக இருக்காதா" று சிலர் கேட்பதாகத் 'தின மணி' கூறி, அவ்விதம் கேட்பவர் களுக்குச் சமாதானமும் கூறுகிறது.

"வறுமையே இல்லாத ஒரு நிலையைத் தோற்றுவிப்பது காந் திஜியின் மனதிற்குப் பிடித்த மான சேவைதான். அதற்காகப் பொது வாழ்விலுள்ளவர்கள் பாடுபட வேண்டியது தான்"

என்று 'தினமணி' கூறுவதைப் பார்த்ததும் நமக்கே ஒரு பூரிப்பு ஏற்பட்டு விட்டது. காந்தியடிகளின் உள்ளக்கிடக்கை எதுவென்பதை அறியாதவர்கள், அவருக்கு நேர் விரோதமான காரியங்களைச் செய்ய முற்பட்டு விட்டார்களே என்று 'தினமணி' கூடக் கண்டிக்க முன் வந்து விட்டதே என்று களிப்பெய் தினோம். ஆனால், உண்மை என்ன என்பது பின்னர்தான் தெரிய வந் தது. பல இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு எழுப்பப் படும் நினைவுச் சின்னம்போன்ற முயற்சிகள் தான் இந்நாட்டின் வறு மையைப் போக்குவதற்குப் பெரும் உதவியாக இருக்குமாம். வறுமை யைப் போக்க ஊக்கமளிக்கும் முயற்சிகளில் இந்த நினைவுச் சின் னம் எழுப்புவதும் ஒன்றும்!

"வறுமையே இல்லாத நிலையை ஏற்படுத்தும் முயற்சிக்கு இந்த நினைவுச் சின்னம் உதவும் படியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை"

என்று அந்தத் 'தினமணி' கூறு கிறது. வறுமையே இல்லாதநிலையை இந்த நினைவுச் சின்னம் எப்படி ஏற் படுத்தும என்பதற்கு விளக்கம் தர வில்லை, அந்த ஏடு. பொது மக்களி டம் இருக்கும் பணத்தில் மூன்றரை லட்சம் ரூபாய்களை நன்கொடை யாகப் பெற்றுக் காந்தியடிகளுக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்புவது, இந்நாட்டின் வறுமையைப் போக்கு வதற்குச் செய்யப்படும் முயற்சி களில் ஒன்றும்! 'பெருங்காயம் இருந்த பாண்டம்' என்று சொல் வார்களே, அதுபோல், இப்போது பொதுமக்கள் காலியாக இருக்கின் றனர். அதாவது, பெருங்காய வாசனை மட்டும் இருந்து பெருங் காயம்இல்லாமல்இருக்கும்பாண்டம் போல், பணம்இருந்தமக்களிடம்இப் பொழுது பணத்தின் வாசனை தான் இருக்கிறதென்று பொருள். அதா வது, பொதுமக்கள் தங்களிட முள்ள பணத்தையெல்லாம் சர்க் காருக்கு வரியாகக் கொடுத்துவிட்டு நடைப்பிணங்களாகஉலவுகின்றனர். இந்த நடைப்பிணங்களிடம்தான்நன் கொடை வாங்கி ஏழை பங்காளனும் காந்தியடிகளுக்கு மூன்றரைலட்சம் ரூபா செலவு செய்து நினைவுச் சின் னம் எழுப்புவது, வறுமையை ஓட்டுவதற்குச் செய்யப்படும் முயற்சிகளில் ஒன்றும்! இதில் சந் தேகமே கொள்ள இடமில்லையாம்! காக்கை கருப்பு — சந்தேகமில்லை! பால் வெளுப்பு—சந்தேகம் இல்லை! பாகற்காய் கசப்பு — சந்தேகம்

இல்லை! நாட்டின் வறுமையை ஓட்டுவோம்—சந்தேகம் இல்லை! காந்திக்கு நினைவுச்சின்னம் கட்டினால் வறுமை தானாகவே ஓடும்—சந்தேகமில்லை! மூன்றரை லட்சம் ரூபா செலவில் கட்டிடம் எழுப்பினால் வறுமை விரைவில் ஓடும் — சந்தேகமில்லை! பொது மக்களின் நன்கொடையால் அந்த நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டால் வறுமை ஏழாயிரம் காதத்துக்கு அப்பால் ஓடிவிடும்—இதில் எள்ளளவும் சந்தேகமே வேண்டாம்! வரிப்பளுவால் வதையுண்டு கிடக்கும் பொதுமக்களிடம், நன்கொடை வாங்கி அவர்களை மேலும் நசுக்கி, நல்லவர்—உத்தமர் காந்தியடிகளுக்குக் கல்லெடுப்பு நடத்தினால், வறுமை என்ற சொல்லே இந்நாட்டு அகராதியில் இல்லாதொழிந்து விடும் — இதில் அணுவளவும் ஐயமே வேண்டாம்! இந்த 'அரிய பெரிய ஆராய்ச்சி' உண்மையைக் காந்திய வழியைக் கடைப்பிடிக்கும் 'தினமணி' கூறிவிட்டது! எனவே, இதில், யாருக்கும்—எந்தக் காரணத்தைக் கொண்டும்—எந்தக் காலத்திலும் சந்தேகம் எழாது!

காந்தியடிகளுக்குக் கல்லெடுப்பு என்று நாம் கூறுவதைக் காணும் சில போலிக்காந்தி விசுவாசிகள் நம் மீது அவசரப்பட்டு ஆத்திரங்கொண்டுவிடக் கூடாதென்பதற்காகக், கல்லெடுப்புப்பற்றிய ஒரு சிறு விளக்கம் கூறவேண்டியிருக்கிறது.

*

இந்தக்கல்லெடுப்புமுறைபண்டைக் காலத்தில் தமிழகத்தில்நடைபெற்ற ஒரு நல்ல ஏற்பாடாகும். நாட்டில் நல்லவர்களாக இருந்தவர்களுக்கு அந்தக் காலத் தமிழ் மக்கள் கல்லெடுப்பு நடத்தினார்கள். அது, இன்று பெரும்பாலும் கைவிடப்பட்டு; அத்தி பூத்தாற்போல், எங்கோ ஒரு சிலருக்குத்தான் கல்லெடுப்புச் செய்கிறார்கள். இந்த வாய்ப்பு இப்பொழுது உத்தமர் காந்திக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால், அன்றைய கல்லெடுப்புக்கும் இன்றைய கல்லெடுப்புக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான் உண்டு. அதாவது, அன்றைய கல்லெடுப்பு அதிக பொருட் செலவில்லாமல் செய்யப்பட்டது — இன்றைய கல்லெடுப்புப் பெரும் பொருட் செலவில் செய்யப்படுகிறது.

இந்தக் காலத்தில் இந்தக் 'கல்லெடுப்பு' என்ற சொல்லை மிக மிகக் கேவலமான முறையில் பயன்படுத்திப் பேசப்படுவதைக் காணலாம். அதாவது, ஏதாவது மனதுக்குப் பிடிக்காத — சோகமான — வெறுப்பான சம்பவங்களைப்பற்றி யாராவது பேசினால் "அது என்ன கல்லெடுப்போ கருமாந்திரமோ, யார் கண்டார்கள்" என்று கூறுவது வழக்கமாகப் பலர் பழக்கத்தில் மேற்கோள் காட்டிக் கூறும் பழமொழியாகிவிட்டது. இது மட்டுமல்ல, இந்தக் கல்லெடுப்பு என்ற சொல்லை இன்னும் மிக மிக மட்டரகமாகப் பயன்படுத்திப் பேசப்படுவதையும் நம் நாட்டில் காணலாம். "அவன் தலைமேலே கல்லைப்போட்டான்" என்றொரு பழமொழியும் நம் நாட்டில் வழங்கப்படுவதைக் காணலாம். அதாவது, யாராவது ஒருவன் தனக்கு விரோதியாக இருப்பவனுக்கு ஏதாவது தொந்திரவு செய்துவிட்டால், அப்படிப்பட்டவனைப்பற்றிப் பேசநேரிடும்போது இந்தப் பழமொழி சர்வசாதாரணமாகப் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். ஆனால், இந்தப் பழமொழி அன்று நல்லவர்களுக்குப் பயன்படுத்தப்பட்டது—இன்று கெட்டவர்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அன்று நல்லவர்கள் தலைமேல் கல்லைப் போட்டார்கள் — இன்று கெட்டவர்கள் தலைமேல் கல்லைப் போடுகிறார்கள். அன்றைய கல்போடுதலுக்கும் இன்றைய கல்போடுதலுக்கும் பெருத்த அளவில் வேறுபாடுண்டு.

கல்லெடுத்தல் — கல் எடுத்தல்; கல் எழுப்புதல், கல் நாட்டுதல் என்று பொருள். அதாவது, நல்லவர்கள் இறந்துவிட்டால், அவர்கள் பெயரால் ஒரு கல் நட்டு, அதில், அவர் பிறந்த தேதி—இறந்த தேதிகளைக் குறிப்பிட்டு, எதிர்காலத்தவர்களுக்கு அவருடைய நல்ல குணங்களையும் நல்ல சேவைகளையும் நினைவுபடுத்துவதற்காகச் செய்யப்படும் ஒரு நல்ல ஏற்பாடாகும். இதனையே அக்காலத் தமிழ்மக்கள் கல்லெடுப்பு என்று கூறினர். ஆனால், இப்படிப்பட்ட ஒரு நல்ல சொல் இக்காலத்தில் மிகவும் கேவலமாகக் கருதப்படுகிறது. இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் கல்லுக்குக் கல்லெடுப்பென்று பெயர்.

விட்டகுறை தொட்டகுறை
காரணமாகவோ என்னவோ, இ
கல்லெடுப்போடு கருமாதி எ
சொல்லையும் சேர்த்துப் பேசுகி
கள். கருமாதியின்போதுதான்
தக் கல்லெடுப்பு அந்தக் காலத்
செய்யப்பட்டது. அதாவது, இ
தவர்களுக்குச் செய்யப்படும் இ
திச் சடங்கு இக்காலத்தில் '
மாதி' என்று அழைக்கப்படுகி

அன்றைய இறுதிச் சடங்கு
நாட்டுவிழாவுடன் முடிவடைந்த

இன்றைய கருமாதி, கருத்
கும், நிகழ்ச்சிக்கும்சம்பந்தமில்
சடங்குகளுடன் முடிவடைகிறத

அன்றைய இறுதிச்சடங்கு
விட முறை.

இன்றைய கருமாதி ஆரிய மு

*

தலைமேல் கல் போடுதல் —
வும் பண்டைக்காலத் தமிழ் மக்
மேற்கொண்ட நல்ல ஏற்பாடுக
ஒன்று. கல் எடுத்தலையே கல்லே
தல் என்று அந்தக் காலத்தில்
பட்டது. கல் எடுத்தலுக்கும்,
போடுதலுக்கும் உள்ள வேறுப
என்னவென்றால், கல் எடுத்தல்
பது, இறந்தவரின் நினைவாக எ
லது ஒரு இடத்தில் கல்நாட்டு
அதாவது, டில்லியில் இறந்த கா
யடிகளுக்குச் சென்னையில் கல்
டுவது போன்றது. இன்னும் வி
மாகக் கூறவேண்டுமானால், ஒரு
டுப் போர்வீரன், இன்னொரு
டில் போர் புரிந்துகொண்டிருக்
போது இறந்துவிட்டால், அ
டைய சொந்தநாட்டில், ஒருமு
மான இடத்தில், அந்தப் போர்
னுடையபெயரால் ஒருகல்நாட்டு
வேற்றூரில் இறந்த அந்தப்
வீரனுடைய உடல், அவன் பி
ஊருக்குக் கொண்டுவர முடி
நிலையில், அவனுடைய பெய
அவனுடைய நாட்டில் முக்கிய
ஒருஇடத்தில், அவனைப்பற்றி
வர்கள் நினைக்க வேண்டுமென்
காகவும், அவனை மற்றவர்
பின்பற்ற வேண்டுமென்பத
வும் ஒரு கல் எழுப்பி அவ
மரியாதை செலுத்துவது எ
பொருள். ஆனால், கல்போ
அதாவது தலைமேலே கல் போ
என்பது, இறந்தவனுடைய
புதைக்கப்பட்ட இடத்தில்

நாட்டுவது. அதாவது, புதைக் ...ட்ட உடலின் தலைப்பக் ...த்தில் ஒரு கல் நட்டு, அவ ...கு மரியாதை செலுத்து ...தயே அன்றைய தமிழ் மக்கள் ...மேலே கல் போடுதல் என்று ...ழைத்தனர். ஆனால், இன்று அக் ...பழமொழி விபரீதமான பொரு... தருகிறது.

...து, காந்தியடிகளுக்கு நினைவுச் ...னம் ஏற்படுத்துவது, இந்நாட் ...வறுமையைப் போக்குவதற்குச் ...யப்படும் முயற்சிகளில் ஒன்று ...று கூறப்படும் புதுமொழியைப் ...ல் தலைகீழாகப் பொருள் தரு...து.

...னவே, காந்தியடிகளுக்குக் கல் ...டுப்புச் செய்யப்படுகிறதென்று ...ம் கூறுவதைக் கண்டு, உண்மைக் ...ந்தி அன்பர்கள் அகமகிழ்வரே ...றி, ஆத்திரப்பட்டு, அறியாமை ...விட்டால் ஆகாத சொற்களால் ...மை அர்ச்சிக்கமாட்டார்கள் என் ...ஒருகலே.

*

...வறுமைக்கு மருந்து கூறிய 'தின ...ணி'யார் மேலும் ஒரு உண்மை ...யும் ஒளிவுமறைவின்றிக் கூறி ...ளார். அதாவது,

"நினைவுச் சின்னத்தில் கோபு...ம் இருப்பதால் காந்திஜிக்குக் கோயில் கட்டுவதாகச் சிலர் பொய்ப் பிரசாரம் செய்யக் ...கூடும்"

...று கூறிக், "கோபுரம் தமிழகத் ...தனிச் சிறப்பு" என்று கூறு...ன் வாயிலாகத் தன்னுடைய ...த்தை வலியுறுத்த முனைகிறது. ...ற்கு நாம் பதில்விளக்கம் கூற ...ண்டிய அவசியமற்ற நிலையை ...சாரியாரே நமக்களித்து விட் ...ர். காந்தியடிகளை ஒருகடவுளாக ...த்துப் பூஜை செய்ய வேண்டு ...ன்று ஆச்சாரியார் கட்டளை ...பித்துள்ளார்.

"காந்தி ஜெயந்தித் திருநாள், ...கோகுலாஷ்டமிபோல் கொண் ...டாடக்கூடியது; இராமன், ...கிருஷ்ணன்போல் கடவுளாகப் ...பூஜிக்கக் கூடியவர் காந்திஜி."

...று, அண்மையில் சென்னையில் ...டைபெற்ற காந்தி பிறந்த நாள் ...கொண்டாட்ட விழாவில் பேசிய ...சாரியார் குறிப்பிட்டுள்ளார். ...வே, காந்தியாருக்குக் கட்டப் படும் நினைவுச் சின்னத்தில் கோபுரம் அமைத்திருப்பதால், அவருக்குக் கோயில் கட்டப்படுகிறது என்று செய்யப்படும் பிரச்சாரம் பொய்ப் பிரச்சாரம் அல்ல, மெய்ப் பிரச்சாரமே என்பதைத் 'தினமணி'யாருக்கு நினைவூட்டுகிறோம். இதில் சந்தேகம் ஏற்பட்டால், காந்தியாருக்கு, அவர் செய்த சேவைக்காக அவர்பால் அன்பும் மரியாதையும் காட்டுவதா அல்லது அவரைக் கடவுளாக வைத்துப் பூஜிப்பதா என்று ஆச்சாரியாரை அணுகிக் கேட்டால், அவர் உண்மையைக் கூறிவிடுவார். ஒருவேளை அது சிரமமான காரியம் — ஆச்சாரியாரைப் போய்ப்பார்க்க நேரமில்லை என்றால், 9—10—53ல் வெளிவந்த 'தினமணி'யை எடுத்து இரண்டாவது பக்கத்தைத் திருப்பி ஆறாவது கலத்தை வாசித்து விட்டு, உடனே, 18—10—53—ல் வெளிவந்த 'தினமணி'யை எடுத்து, இரண்டாவது பக்கத்தைத் திருப்பி மூன்றாவது கலத்தை வாசித்துக் கொண்டுபோனால், நாம் கூறும் உண்மை நன்கு தெளிவாகும். காந்தியடிகளுக்குக் கோயில் கட்டி, அவரை ஒரு கடவுளாக வைத்துப் பூஜிக்க வேண்டுமென்று கூறி, ஒரு வாரமாவதற்குள், அவருக்குக் கோபுரத்தோடு கூடிய ஒரு கோயில் 'நினைவுச் சின்னம்' என்ற பெயரால் கட்டத் தொடங்கியதைக்கூடக் கவனிக்க நேரமும் நிதானமும் இல்லாத 'தினமணி' காந்திஜிக்குக் கோயில் கட்டுகிறார்கள் என்று சிலர் பொய்ப் பிரச்சாரம் செய்யக் கூடும் என்பதாகப் புலம்புகிறது.

காந்தியடிகளைக் கடவுளாக்கி அவருக்குக் கோயில் கட்டிவிடுவார்கள் என்ற உண்மையை, நாம் பல காலமாகவே கூறிவருகிறோம். காந்தியார் உயிரோடிருந்த காலத்திலேயே, அவருடைய படம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, பூஜை நைவேத்யங்கள் செய்து, சப்பரத்தில் வைத்துக், கடவுள் வடிவங்களை ஊரைச் சுற்றி இழுத்து வருவது போல் இழுத்தார்கள் என்றால், அவர் இறந்தபின், அவரைக் கடவுளாக்குவது ஆச்சரியப்படக்கூடிய சம்பவமல்ல. அன்றைய அயோத்தி இராமனுக்கும், துவாரகைக் கிருஷ்ணனுக்கும் கோயில் கட்டிய பரம்பரையில் வந்தவர்கள், நாட்டின் நன்மையைத் தவிர பிறிதொன்றையும் கனவிலும் கருதாத காந்தியடிகளுக்கும் கோயில் கட்ட முன் வந்துவிட்டார்களே என்பதை நினைக்கும்போதுதான், இராமாயண-பாரதக் கதைகளில் வரும் எத்தனையோ சம்பவங்கள் நம் மனக்கண் முன்தோன்றி அலைமோதி மறைகின்றன.

நல்லவர்கள், இப்படித்தான் கெட்டவர்களாக்கப்படுகின்றனர் போலும் என்ற எண்ணம் நம்மை வந்து தொடச் செய்கிறது.

*

பூஜைக்கும் மரியாதைக்கும் வேறுபாடு காணமுடியாத புத்தித் தெளிவற்றவர்கள், மரியாதை காட்டப் படவேண்டியவர்களைப் பூஜிக்க ஆரம்பித்துத் திராவிடப் பண்புக்கே தீ வைக்கப் பார்க்கிறார்கள்.

பூஜை—மரியாதை — இந்த இரண்டு சொற்களும், ஒன்றுக்கொன்று நேர் விரோதமானவை.

பூஜை — அச்சத்தால் செய்யப்படுவது.

மரியாதை—அன்பால் ஏற்படுவது.

புஷ்பத்தால் பூஜிக்கப்படுபவர்—கடவுள்.

மனத்தால் மரியாதை காட்டப் படுபவர்—மனிதர்.

மனிதனைக் கடவுளாக்குவது மடைத்தனம்.

கடவுளில் மனிதனைக் காட்டுவது காட்டுமிராண்டித்தனம்.

மனிதனில் மனிதனைத்தான் காணமுடியுமேயொழியக் கடவுளைக் காணமுடியாது – முயலவுங்கூடாது.

கடவுள், கற்பனை உலகில் உலவுபவர்.

மனிதன், இயற்கையான உலகில் கண்கூடாக உலவுபவன்.

கடவுள், எல்லாவற்றையும் கடந்தவர்.

மனிதன், கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடக்கவேண்டியவன்.

மனிதனுக்குக் கட்டுப்பாடு என்ற மூக்கணாங் கயிறு உண்டு.

கடவுளுக்கு, அது கிடையாது. அவர், அங்கிங்கெனாதபடி எங்கும் இருப்பவர்.

மனிதனுக்கு, இங்கன்றி புகலிடம் வேறில்லை.

கடவுள்—அசரீரி!

மனிதன்—சரீரி!

மனிதன், மானத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்பவன்.

மகேஸ்வரன், பிடியதன் உருக்கொண்டு பெரும்போகம் நுகரும் மானங்கெட்ட வேலை செய்பவர்.

எனவே, மனிதனைக் கடவுளாக்கும் மடைத்தனமான காரியத்தை, மக்களின் பண்பறிந்தோர் ஒருபோதும் செய்யமாட்டார்கள். ஆனால், செய்கிறார்கள்! மனிதரைக் கடவுளாக்கும் மதியீனத்தை அன்றுதான் செய்தார்கள் என்று கருதி, அதற்குப் பரிகாரம் தேடும் இந்தக் காலத்திலும், அந்த அடாத செயலைப் புரியச் சிலர் இருப்பதைக் காணும்போது, இந்தக் காலத்தை ஒரு கதம்பம் என்றே கருதவேண்டி இருக்கிறது.

இப்படிப்பட்டவர்கள், இரண்டு ஓடங்களில் கால் வைக்கின்றனரா அல்லது ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்காகின்றனரா? ஒன்றும் புரியவில்லையே!

விஞ்ஞானத்தோடு அஞ்ஞானத்தையும், அறிவோடு அறியாமையையும் ஏன் கலக்கிறார்கள் இவர்கள்.

காந்தியடிகளுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவது அறிவோடு கூடிய ஒரு சிறந்த செயல்.

இந்த அறிவு நிரம்பிய செயலுக்கு, மாறாத களங்கத்தை உண்டாக்கும் அந்தக் கோபுரம், 'எங்களுக்கு இருக்கும் அறிவைவிட அறியாமையே அதிகமாக உள்ளது' என்பதைத்தானே, அதன் உயரத்தாலும் பருமனாலும் உலகுக்குக் காட்டிக்கொண்டிருக்கிறது.

காந்தியடிகளுக்கு உள்ளபடியே மதிப்புக் கொடுத்து மரியாதை காட்டி, அவர் வழியைப் பின்பற்றுபவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள், என்ன செய்திருக்கவேண்டும்?

காந்தியார், தம்முடைய அரசியல் வாழ்வுக்காக அமைத்துவாழ்ந்தகுடிசையைப் புகைப்படமாக எடுத்து, அதனை நினைவுச் சின்னத்துக்கு 'பிளான்' எழுதியவரிடம் கொடுத்து இப்போது கோபுரம் அமைத்திருக்கும் இடத்தில், அந்தக் குடிசையை அமைத்துப் 'பிளான்' எழுதும்படி செய்து, அதன்படி நினைவுச் சின்னம் எழுப்பியிருந்தாலாவது, இவ்வளவு இலட்சக்கணக்கான பணம் செலவிட்டதற்காகக்கூட வருந்தாமல், அவர் எப்படி வாழ்ந்து—எப்படித் தன்னுடைய இலட்சியத்தில் வெற்றியடைந்தார் என்பதை எதிர்காலத்தவர் அறிந்து, அவருக்கு மரியாதை காட்ட வழி ஏற்பட்டிருக்கும்.

ஒரு நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட ஒரு உத்தமருக்கு ஏன் இந்த நிலை ஏற்பட்டது—ஏற்படுத்தப்பட்டது என்பதை நினைக்கும்போதுதான், நாம் உள்ளபடியே வருந்துகிறோம்.

காந்தியடிகளுக்கு, உண்மையான—தேவையான — பொருத்தமான நினைவுச் சின்னம் கட்டப்படவில்லை. மாறாக, அவரை ஒரு கடவுளாக்கி, அந்தக் கடவுளைப் பிரதிஷ்டை செய்துவைப்பதற்காக ஒரு கோயிலையே கட்டியுள்ளார்கள் என்று நாம் கூறுவதை ஒப்புக்கொள்ளும் முறையிலேயே சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

> "ஒரு கோயிலைக் கட்டினால், எவ்வளவு பக்தி சிரத்தையான சுற்றுணர்ச்சி இருக்குமோ, அதே மாதிரி இந்த வைபவம் இருந்தது"

என்று, "நினைவுச் சின்னத்தில் கோபுரம் இருப்பதன் காரணமாகக் காந்திஜிக்குக் கோயில் கட்டுவதாகச் சிலர் பொய்ப் பிரச்சாரம் செய்யக்கூடும்" என்று தலையங்கம் தீட்டிய 'தினமணி'யார் எழுதியிருக்கமாட்டார், வேறு யாரோ விதண்டாவாதிகள்—காந்திய எதிரிகள்தான் இப்படிச் சொல்லியிருப்பார்கள் என்றுதான் எவருக்கும் எண்ணத் தோன்றும். ஆனால், உண்மை அதுவல்ல. காந்தியடிகளுக்குக் கோயில் கட்டுவதாகச் சிலர் பொய்ப் பிரசாரம் செய்யக்கூடும் என்று எந்தப் 'புத்திசாலி'ப் பத்திரிகை தலையங்கம் தீட்டிற்றோ, சாட்சாத் அதே பத்திரிகைதான், இந்தச் செய்தியையும் அதே தேதியில் வெளியிட்டிருக்கிறது

அதுமட்டுமல்ல, கோயில்கள் புதிதாகக் கட்டப்பட்டுப் பிரதிஷ்டை செய்யப்படும்பொழுது, மூலஸ்தானத்துக்கடியில், நவரத்னங்களையும், மிக விலைஉயர்ந்த பொருள்களையும் போட்டு மூடிவிடுவது போல், காந்தியாரின் நினைவுச் சின்னம் கட்டும்பொழுதும் செய் பட்டதாம்.

> "அஸ்திவாரக் கல்லை நாட் சிமெண்டினால் அதைப் பூ தற்கு முன்பு, கல்லுக்குப் புறமுள்ள இடைவெளியில் ரத்னங்கள் போடப்பட்ட ரூபா நாணயங்கள், இந்தியதப ஸ்டாம்புகள், ஞாபகச் சின்ன தின் படம் ஒன்று, 'இந்திய எக்ஸ்பிரஸ்' பத்திரிகை ஒன் ஆகியவைகள் உள்ளே வைக் பட்டன."

இந்தப் பிரதிஷ்டை வைபவக் கு கலச் செய்தியையும் அந்த 'மு போக்கு' ஏடான 'தினமணி'தா தருகிறது. இதோடு நிற்கவில் மேலும் சில முக்கிய சம்பவங் யும் அந்தப் பத்திரிகை பொது களின் பார்வைக்கு வைக்கிறது.

> "கவர்னர் புஷ்பங்களைத்தூ பூஜை செய்தார். பின்பு ராஜ யும் அப்படியே செய்தார். க யிருந்தவர்கள்மீது புஷ்பங் தூவப்பட்டன. நாதஸ்வ முழங்கிற்று. ஸ்ரீ குப்புசா ஸ்தபதி மந்திரங்களைச் சொ னார். அஸ்திவாரக்கல் கிழக் நோக்கி இருக்கிறது."

என்ற செய்தியையும் அந்தப் பத் ரிகை தந்திருக்கிறது.

புதிதாகக் கட்டப்படும் ஒ கோயிலுக்கு என்னென்ன சடங் கள் செய்யப்படுமோ, அவற் ஒன்றுகூட விடாமல், காந்திய களின் கோயிலைக் கட்டுவதற் செய்யப்பட்டிருக்கிறது.

கட்டிடம் கட்டுவதற்கு மூன்ற லட்சம் செலவிடுவது போ தென்று, நவரத்னங்களும், ரூ நாணயங்களும் உத்தமர் காந்திய களின் பெயரால் நாட்டப்ப அஸ்திவாரக் கல்லுக்குக் கீ போடப்பட்டனவாம்! இந்தச் சம் வம் ஒரு உத்தமரின் பெயா செய்யப்படுகிறதே என்பதை எ ணும்போது நமக்குப் பரிதா ஏற்பட்டபோதிலும், இவ்வள அறியாமை, இந்த நாட்டில், இ இருபதாம் நூற்றாண்டின் கடை காலத்தில்கூட தலைவிரித்தா கிறதே என்பதை எண்ணும்போ இப்படிப்பட்ட அறியாமைக் அழிவுகாலம் எப்போது வரு என்ற ஏக்கம் நமக்கு ஏற்படுகிற

எனவே, உத்தமர் காந்திக்கு
னைவுச் சின்னமல்ல இவர்கள் ஏற்
படுத்துவது. அவருடையகொள்கை
ளுக்கு அழிவுச் சின்னமே அமைக்
றார்கள். பிரார்த்தனைக் கூடமல்ல
அது. பித்தம் பிடித்தவர்களின் பிர
ங்க மண்டபமே அது.

வெள்ளையுள்ளம் படைத்த காந்தி
யாரின் நினைவுச்சின்னமாகக் கட்டப்
படும் மண்டபத்திலே — வெட்ட
வெளியையே தம்முடைய பிரார்த்
னை மண்டபமாகக் கொண்டிருந்த
காந்தியடிகளின் நினைவுமண்டபத்தி
லே—தியானம் செய்வதற்காக ஒரு
பாதாள அறையும் அமைக்கப்படு
கிறதாம்! அதன் நீளம் 26 அடியாம்!
அகலம் 16 அடியாம்!

வெட்ட வெளியே பிரார்த்தனைக்
குரிய இடம் என்று கூறிச் செய
லிலும் இதனைச் செய்து காட்டிய
செம்மலின் பெயரால் கட்டப்படும்
கட்டிடத்தில் கள்ள அறை ஏன்?

கள்ளங்கவடற்று வாழ்ந்து, கடை
சியில் கள்ள உள்ளங்கொண்ட கய
வன் ஒருவனுல் சுட்டுக் கொல்லப்
பட்ட கோற்றவனுக்குக் கட்டப்
படும் நினைவு மண்டபத்தில் ஒரு
மறைவிடம் ஏன்?

நல்லவர்களை எப்படி ஒழித்துக்
கட்டுவது என்பதனை முடிவு செய்வ
தற்கன்றி பாதாள அறைகள் வேறெ
தற்கும் பயன்படாதே!

சதிகாரர்கள்தான் பாதாள
அறைகளை உண்டாக்கி, அங்கிருந்து
கொண்டு, தாங்கள் செய்யவிருக்கும்
சதிச்செயல்களை முடிவுசெய்வார்கள்
—செய்தார்கள் என்று சரித்திரங்
கள் கூறுகின்றன.

எனவே "வெட்ட வெளியில் திரி
பவர்க்கு முட்டாக்கு எதுக்கடி"
என்று ஒரு சித்தர் அன்றொரு
நாள் கேட்டாராம்! அதைப்
போல் உத்தமர் காந்தியின் பெய
ரால் கட்டப்படும் நினைவு மண்ட
பத்தில்: அதமர்களை நினைவூட்டும்
சின்னங்கள் வேண்டாம் என்று
கேட்டுக் கொள்வதோடு, இப்படிப்
பட்ட ஆபாச அம்சங்களோடு
அமைக்கப்படும் மண்டபம் திரா
விடக்கலைப் பாணியில் கட்டப்
படுவதாகக்கூறப்படுவது உண்மையி
லேயே—வேண்டுமென்றே திராவிட
மக்களையும், திராவிடக் கலையையும்
இழிவு படுத்துவதற்காகச் செய்யப்
படும் ஒருகாரியம் என்றே திராவிடக்
கலையின் சிறப்பை உணர்ந்த அனை

வரும் கருதுவர். எனவே திராவிடக் கலைப் பாணியில் இந்தநினைவுச் சின்னம் அமைக்கப்படுகிறதென்ற மயக்க மொழிகளால் மக்களை ஏமாற்ற வேண்டாமென்றும் கேட்டுக் கொள்கிறோம்.

*

"காந்தியடிகளின் நினைவுச் சின்னமாக எழுப்பப்படும் மண்டபம் திராவிடக் கலைப் பாணியில் அமைய வேண்டும் என்று விரும்பி அவ்விதம் செய்யப்பட்டது."

*

"உலகினர் கண்டு வியக்கும் அதி யற்புத கலாபொக்கிஷங்கள் உள்ள பெருமை தமிழகத்துக்கு உண்டு"

*

"தென் இந்திய கலாச்சாரம் இந்தியாவில் தலை சிறந்தது. திராவிடக் கலாச்சாரம்பற்றி வட இந்தியர் அறிய வேண்டுமென்பதே என் விருப்பம்"

*

"எந்தப் பகுதியில் இந்த நினைவுச் சின்னம் எழுப்புகிறோமோ அந்தப் பகுதிக்கு ஏற்பக் கலையழகு கொண்டதாக அது அமைய வேண்டும்"

*

"டில்லியிலும் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப் போகிறார்கள். அது மிகப் பிரமாதமாய் இருக்கும். அவர்களுக்குப் பொருள் முதலிய சாதனங்கள் அளவு கடந்து இருக்கின்றன. சென்னைப் பகுதி ஏழ்மையானது. மக்களும் ஏழ்மையானவர்கள். சர்க்காரும் அதைவிட ஏழ்மையானது."

*

"முக்கியமான வருவாய்களை எல்லாம் மத்திய சர்க்காருக்குக் கொடுத்து விட்டு, மத்திய சர்க்காரை சென்னை சர்க்கார் எந்த அபிவிருத்தி திட்டங்களுக்கும் பொருள் உதவி கிடைக்குமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது"

*

"செங்கல்லும் சுண்ணாம்பும் கலந்த ஒரு கட்டிடம் காந்தியடிகளின் நினைவுக்கு அவசியமா"

*

"காந்தியடிகள் போதித்தசத்தியமும், சுதந்திரப் போராட்டமுமே அவருக்கு ஈடு இணையற்ற நினைவுச் சின்னமாகும்"

*

"என்றாலும், இது கலியுகமாதலால் பிரத்தியட்சமாகத் தெரியக் கூடிய ஒரு சின்னம் தேவைப்படுகிறது."

*

"எந்த விதமான வித்யாசமும் பாராட்டாது யாரும் வரக்கூடிய ஒரு பிரார்த்தனை மண்டபம் கட்டுவது தகுதியானதென்று முடிவு செய்யப்பட்டது"

*

இவ்வளவு பொன்மொழிகளும், காந்தியடிகளின் நினைவாகச் சென்னையில் ஒரு மண்டபம் கட்டும் ஆரம்ப விழாவின் போது காந்தியவாதிகளால் உதிர்க்கப் பட்டவையாகும்.

திராவிட நாட்டுக்கு இது ஒரு பெருமை தரக்கூடிய சின்னமாக விளங்கும் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு காந்தி நினைவு மண்டபம் கட்டப்படுகிறதென்றால், அதனை நாம் வரவேற்கிறோம். காந்தியடிகள் போன்ற ஒரு உத்தமரின் பெயரால் ஒரு நினைவு மண்டபம் திராவிட நாட்டில் இருக்கிறதென்பதை எதிர்காலத் திராவிட மக்கள் காணநேரும் போது, "கோன்றன்ன இன்னா செய்யினும், அவர் செய்த ஒன்று நன்றுள்ளக் கேடும்" என்ற தமிழ் மறைக்கு இலக்காக நடப்பவர்கள் திராவிடர்கள் என்பது இதனால் உறுதிப் படுத்தப்படுகிறதென்று பூரிப்படைவர் என்பதிலும் சந்தேகம் இல்லை. இறந்துபட்ட நல்லவர்களுக்குக் கல்லெடுப்பது திராவிட மக்களுக்கென இருக்கும் ஒரு தனிப் பண்பாகும். தம்முடைய வாழ்நாள் முழுவதையும் மக்களின் நல்வாழ்வுக்கென ஒப்படைத்துப் பணியாற்றிய ஒரு உத்தமரின் நினைவாக ஒரு மண்டபம் திராவிட நாட்டில் இருக்கிறதென்றால், அதுவும் வரவேற்கக் கூடியதுதான்.

ஆனல், அந்த மண்டபம் திராவிடக் கலைப் பாணியில் (Dravidian Style) அமைக்கப்படுகிறது என்று கூறுகிறார்களே அதனை நாம் எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒப்புக் கொள்ள முடியாது.

அந்த மண்டம் ஆரியக்கலைப் பாணியில் அமைக்கப்படுகின்றது என்று கூறினலாவது அதில் அர்த்தம் இருக்கிறது. ஒருவேளை ஆரியத்துக்கென் ஒரு கலை இல்லையென்

றால், அதனை ஒரு 'மதக்கலை' என்று வேண்டுமானால் கூறட்டும் — நாம் ஆட்சேபிக்கவில்லை.

மனிதனைக் கடவுளாக்கும் மதியீனத்தைச் செய்ததுமன்றி, அதற்கென ஒரு கோயிலும் கட்டிவிட்டு, அதனைத் திராவிடக் கலைப்பாணியில் கட்டுகிறோம் என்று வேறு கூறுவது மிக மிக வருந்தக்கூடிய ஒன்றாகும். திராவிடக் கலைக்கும் இந்த மண்டபத்துக்கும் என்ன தொடர்பை உண்டாக்கினார்கள் என்பதே புரிந்து கொள்ளமுடியாத ஒன்றாக இருக்கிறது. கூத்திலே கோமாளி வருவதுபோல் திராவிடக்கலை இந்த மண்டபத்துக்குள் வருகிறது.

கூத்துக்கும் கோமாளித்தனத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்றபோதிலும், கூத்தின் இடையிடையே கோமாளி வந்து தன்னுடைய கூத்தையும் நடத்திவிட்டுத்தான் போவான். கோமாளி இல்லையென்றால், கூத்தே சோபிதப்படாது—யாரும் ரசிக்கமாட்டார்கள். எனவே கூத்துக்குக் கோமாளி தேவைப்படுகிறது.

காந்தியவாதிகள் நடாத்தும் இந்தக் கூத்துக்குத் திராவிடக்கலை தேவைப்படுகிறது.

கூத்துக்கு ஒரு கோமாளி இல்லையென்றால், அது, எப்படிச் சோபிதப்படாதோ, அதுபோலவே, திராவிடத்தில் அமைக்கப்படும் ஒரு மண்டபமும் திராவிடக்கலை இல்லை என்றால் சோபிதப்படாது என்று கருதித்தான்போலும்! அந்தமண்டபம் திராவிடக் கலைப் பாணியில் கட்டப்படுகிறதென்று கூறுகிறார்கள் என நாம் நினைக்கிறோம்.

அந்த மண்டபத்தில் மொத்தம் எண்பது தூண்கள் இருக்குமாம். அவற்றில் ஐந்து தூண்கள்மட்டும் திராவிடக்கலைப் பாணியில் அமைக்கப்படுமாம்.

கூத்தில் எத்தனையோ பாத்திரங்கள் வந்துபோகும். ரசிகர்கள் அந்தப் பாத்திரங்களைப்பற்றிக் கவலைப்படுவதே இல்லை. ஆனால், கோமாளிப் பாத்திரம் வந்ததும் தூங்கிக்கொண்டிருப்பவர்களும் விழித்துக் கொள்வர்.

ரசிப்புத்தன்மையற்ற கூத்தைக் கோமாளியைக் கொண்டு ரசிக்கும்படி செய்வதுபோல், காந்தி நினைவு மண்டபத்திலுள்ள ஆபாசங்களை மறைக்கத் திராவிடக் கலை பயன்படுத்தப்படுகிறது.

எனவேதான், உலகிலேயே ஈடு இணையற்ற திராவிடக் கலையை இப்படி இழிவு படுத்த வேண்டாம் என்று கூறுகிறோம்.

ஆனால் ஒன்று மட்டும் நமக்கு மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. அதாவது, "ஆரியராவது! திராவிடராவது! அதெல்லாம் ஒன்றும் கிடையாது! வெறுங் கூச்சல்!" என்று கூறுபவர்கள் வாயிலிருந்தே திராவிடர்—திராவிடம்—திராவிடக் கலை என்ற சொற்கள் புறப்படுவதைக் காணும் போது, நமது லட்சியம் விரைவில் கைகூடப் போகிறதென்ற களிப்பு நமக்கு உண்டாகிறது. திராவிடக் கலைப் பாணியில் அந்த மண்டபத்தை அமைப்பதாகப் பேசிய ஆச்சாரியார்,

"நாம் திராவிடச் சிற்ப முறையைக் கையாள்கிறோம் என்பதால் நம்மைத் தனியாகப் பிரித்துக் கொள்கிறோம் என்று அர்த்தமில்லை."

என்பதாகவும் பேசியுள்ளார்.

பாகிஸ்தான் பிரிவது, பசுவைத் துண்டிப்பதுபோலாகும் என்று பேசியவர்தான், பின்னர், பாகிஸ்தான் பிரியவேண்டியதுதான் என்பதற்கும் முன்னணியில் நின்றவர். சாட்சாத் அவரேதான், இப்பொழுது திராவிட நாட்டுப் பிரிவினையைப் பற்றியும் பேசுகிறார். பேசுகிறார் என்றால், திராவிட நாடு தனியாகப் பிரியக்கூடாது என்று கூறுபவர்களில் முதல் வரிசையில் முதல் ஆளாய் நின்று பேசுகிறார். சமயம் வரும்போது, இவரே திராவிட நாடு பிரியவேண்டியது தான் என்றும் கூறப்போகிறார்.

காந்தியடிகளின் நினைவால் ஒரு மண்டபம் கட்டுவதற்குக் அஸ்திவாரக்கல் நாட்டிய அந்த நல்விழாவின் போது, திராவிட நாட்டுப் பிரிவினைக்கும் அஸ்திவாரம் போட்ட ஆச்சாரியாருக்குத் திராவிட மக்களின் சார்பில் நன்றி செலுத்துகிறோம். அறிவுக்குப் புறம்பான காரியங்களையே செய்பவர்கள், ஒவ்வோர் சமயத்தில் 'அதிசயிக்கும் நிரம்பிய' காரியங்களையும் செய்ய முன் வருவதைக் காணக் களிப்படைகிறோம். எனவேதான் அறியாமைக்கு அழிவுகாலம் எப்போது ஏற்படும் என்று எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது.

✲

ஜோக்கர் ஜொலிப்பு!

"அ"

"ராஜாவின் உருவம், சரியாகத் தெரியாது"

"ராணியின் நிலையோ — கேட்க வேண்டாம். மேலும் கீழும் மடிந்து, நைந்துபோயிருந்தது"

"ஜாக்கின் உருவத்தைக் கண்டு பிடிப்பதென்பது, மகா கஷ்டம்!"

"எண்ணெயில் போட்டதுபோல, பிசுபிசு என்று ஒட்டிக்கொண்டிருக்கிறது"

"அட, லாயக்கில்லை! குப்பைத் தொட்டியில் போடவேண்டியது தான்!!"

"ஏஸ்—எப்படியிருக்கிறது?"

"கண்டுபிடிக்கப் பூதக்கண்ணாடி தான் வேண்டும்"

தேய்ந்து, உருக்குலைந்துபோன இந்தச் சீட்டுக்கட்டை, சிந்துவாரோ மக்கள்? செச்சே!—என்று, கூறினா[illegible]

அதுவும், 'யுனிடி கிளப்'பில் வந்து தங்கிய நண்பர்களுக்கு, இந்த[illegible] கட்டு எப்படிப் பிடிக்கும்.

"இதுதான், சார்! வேறே, சீட்டு கிடையாது" என்று ஓட்டல் முதலாளி, கொண்டுவந்துகொடுத்தான். ஓட்டலில் தங்கிய நண்பர்கள் ஒவ்வொருவரும், முணுமுணுத்தனர்.

"என்னப்பா, ஓட்டல், இது?" என்றான், ஒருவன்.

"போயும் போயும் இங்கே வந்து தங்கினோமே!" — என்றான், இன்னொருவன்.

"உடைந்த கட்டில்! கிழிந்த மத்தை! மூட்டைப் பூச்சிவாழும் லையணை! பழைய சீட்டுக்கட்டு!—ப்பப்பா, போதுமடா, இத் தால்லை" — என்ருன், மற்ருவன்.

"இனுமாகவா தருகிருன்? நாம், ணம் கொடுக்கவில்லையா! பார், ன்ன செய்கிறேன் — அந்த முத ளியை......" என்று எழுந்தான், டபடப்புள்ள ஒருவன்.

அவனை, அந்த நண்பர் குழாத் தச் சேர்ந்த இன்னொருவன், த்துச் சொன்ஞன் — "நண்பா! ம் கூறுவதெல்லாம், சரி. ஆனுல், ந்து தங்கிவிட்டோம். நேரமோ, ரவு. எங்கே போனுலும், புதுக் ட்டு, அகப்படாது. ஆகவே, இதை வத்துக்கொண்டே, ஆடுவோம்—ன்ன செய்வது?"

*

தோழர்கள், கட்டைப்பிரிக்க ரம்பித்தார்கள்.

சிலர் 504? 304? என்று, கலந்து சி முடிவு செய்தார்கள்.

சீட்டை எண்ணிப் பார்த்தால், ளாவர் ஜாக் ஒன்று இல்லை.

"ஐயயோ! ஜாக்—இல்லியே!!"— ன்று, ஒருவர், கத்தினுர்.

எல்லோரும், திகைத்தார்கள். டைசியில், சீட்டாட்டத்தில் மிகப் ழக்கப்பட்ட, ஒருவர், ஒரு ாசனை சொன்ஞர். "ஜாக், இல்லை என்பதற்காக, ஆட்டத்தை த்திவிட்டால், இரவைக் கழிக்க ன்ன செய்வது? ஆகவே, நான், றுகிறபடி செய்யலாம்" — ன்ருர்.

"என்ன? என்னயோசனை!" என் ார், சீட்டாட்ட நண்பர்கள்.

புதிய கண்டு பிடிப்பு!

ஆண்டவனை நேரடியாக சேர ங்கீதம் ஒரு சாதனமாக இருக் றது. ஆண்டவனை நோக்கிச் சல்ல ஒரு நல்ல சிமெண்டு ோடாக சங்கீதம் அமைந்துள் து. நேராகப் போகலாம்.

ஆச்சாரியார்,
21—10—53.

"ஜாக் இல்லை—சீட்டோ, தேய்ந் தவை — எனினும் எப்படியாவது, ஆடவேண்டும். ஆகவே......"

"ஆகவே......?"

"எங்கே, ஜோக்கர்?" — என்று கேட்டார். எடுத்துக்கொடுத்தார், ஒரு நண்பர். 'வேண்டாம்!' என்று வீசி எறியப்பட்ட ஜோக்கர், அறையின் மூலையில், குப்பை களோடு குப்பையாய், துடைப்பக் கட்டையின்மேல், கிடந்தது.

அந்த ஜோக்கரைத் தேடும் முயற்சியிலீடுபட்டனர்.

கடைசியில், ஜோக்கர், அகப்பட் பட்டது.

'ஜாக்கின்' மதிப்பு, ஜோக்கருக்கு, அளிக்கப்பட்டது.

டயமண்ட் ஒன்பதைப் பாய்ந்து வெட்டும்!

இஸ்பேட் பத்தைத் திடீரெனச் சாய்க்கும்!

ஆட்டியன் ராஜாவை, ஒரே அடி யில்,வீழ்த்தும்!—ஜோக்கரின்மகிமை, மிக மிக அதிகரித்து விட்டது.

"ஜோக்கரை எடுத்துப் போடப்பா!" — என்று அலட்சிய மாகப் பேசியோரெல்லாம், அதற்கு மதிப்புக் கொடுக்க வேண்டிய நிர்ப் பந்தம் வந்தது.

சீட்டாட்டம், அல்லவா?—சிந்து வாரற்ற அந்த ஜோக்கர், நண்பர்கள் தந்த, மதிப்பால் பிரமாதமாக ஜொலிக்கிறது!—விடிந்து விட்டால், 'யுனிடிகிளப்'பில் தங்கிய நண்பர் குழாம், தத்தமது வேலைகளைக் கவ னிக்கச் சென்றுவிடக் கூடும்.

அப்போது, ஜோக்கரின், மதிப்பு என்ன?—ராஜாவை வெட்ட முடி யுமா, ஒன்பதைச் சாய்க்கமுடியுமா, பத்தை 'ஜெயிகக' முடியுமா, பல ரையும் பயமுறுத்தத்தான் முடி யுமா!!

அதுவும், சீட்டுக்கட்டுவேறு, நைந்து போயிருப்பது.

அதனைப் புரிந்துகொள்ளாத, அந்த ஜோக்கர், ஆடுகிறதாம்! பாடு கிறதாம்! ஆர்ப்பரிக்கிறதாம்!!

*

ஏதோ, ஒரு நூலில், இவ்விதம் படித்ததாக, ஞாபகம்.

இன்றைய அரசியலையும், இங்கே ஆர்ப்பரிக்கும் ஆச்சாரியாரையும் எண்ணினேன். கதை, நினைவுக்கு வந்தது.

'ஜோக்கர்' — பற்றி, விளக்க வேண்டிய அவசியமில்லை.

இன்றைய நிலை, இப்படி! நாளைய தினம்......?

பாபம்! எதிர்ப்பட்டோரையெல் லாம், இறுமாப்புடன் மிரட்டுகிறது! எதிர்காலத்தில்...... .? நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது!

மன்னியுங்கள், அதை! ஜோக்கர் எப்பவும் ஜொலிக்காது!! அதுவும், மக்களால் வெறுக்கப் படும், பழைய சீட்டுக் கட்டிலிருக்கும், ஜோக்கரன்ரே, அது?

★

பார்க்கடலார்
பறிகொடுத்தார்

ஆபத்பாந்தவா! அநாதரட்சகா! என் குறைகளைப் போக்கு! என்று பக்த கோடிகள் பூஜிக்கும், காவே ரிப்பாக்கத்திற்கு அடுத்த திருப்பாற் கடல் கிராமத்திலிருக்கும் ரங்க நாதர் கோயிலிருந்த ரூபா 1000 மதிப்புள்ள நகைகள், வெள்ளி, பித்தளை பாத்திரங்கள் திருடு போய்விட்டன.

கோயிலின் அர்ச்சகரில் ஒருவர் தலை மறைவாய் இருக்கிருர்.

ஆண்டவன் அருகில் அனுதின மும் இருந்து ஆராதிக்கும் அர்ச்ச கர், ஆண்டவனின் பொருளை அப கரித்தார் என்ருல் — அந்த அர்ச்ச கர் ஆண்டவனுக்குத் தரும் பெருமை எவ்வளவு தூரம் இருக் கிறது என்பதை பக்தகோடிகள் இனியேனும் தெரிந்துகொள்வார் களா?

தெரிந்து கொண்டால், ஆலயத் தைத் தொழுகை இடமாக்கி, ஆப ரணங்களையோ, தங்கத் தட்டங்க ளையோ, வெள்ளி விமானங் களையோ, அங்கு குவிக்காமல், ஆண்டவனின் அருளைமட்டுமே பெறுவதற்கு ஓர் இடமென்று தெளிவு பிறந்துவிடுமே! இந்த கைய தொல்லைகள் நிகழாதே!

பொருள்களை இழந்து பரதவிக் கும் ரங்கநாதருக்கு நாம் என்ன ஆறுதல் கூறமுடியும்?

வேறு சில கோயில்களிலே தங் கள் துணைவியர்களையே பறிகொடுக் கும் பாமர்கள், நமது பெருமையை அர்ச்சகர்களே அவமதிக்கிருர்கள் என்று ஆறுதல் கூறலாம்.

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 25—10—53 [ஞாயிறு

ஆயிரம் வரவு!

★

ஆயிரம் ரூபாய்!—அனுப்பியிருக்கிறாராம், பண்டித நேரு.

மதுரையில் மாண்ட தேசியத் தோழர் கருப்பையாவின் நினைவாக இந்த அன்பளிப்பை அனுப்பியுள்ளாராம்.

மகிழ்கிறோம், செய்தி கேட்டு! மகனை இழந்த மாதாவின் அழுகுரல், அதற்குள், அவர்தம் செவிபுகச் செய்து, 'செக்' அனுப்புமாறு ஏற்பாடு செய்த இங்குள்ளாருக்கும், நமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தோழர் கருப்பையா—தேசியக் கூடாரத் திருப்பணியில் ஈடுபட்டவர் என்றாலும், செந்தமிழ்ச் சோலையின் சொந்தக்காரர் ஆவார்—நமது திருவிட மண்ணின் சகோதரர், ஆவார்.

அவரது வாழ்வு, ஆத்திரக்காரர்கள் மூட்டிய தீயால், பொசுக்கப்பட்டது கேட்டு — சிந்தை நோகாதார், இரார். அவர்களுக்கு, ஆயிர ரூபாய்ச் செய்தி, நிச்சயம் ஆறுதலளிக்க முடியாது. எனினும், 'இவ்வளவு விரைவில்-இவ்வளவு பெரியவரிடமிருந்து' இத்தொகை வந்திருப்பது கேட்க-தொகை அனுப்பிய பண்டிதர் அவர்களைப் பாராட்டுகிறோம். தொண்டர்களின் துயர்க் குரல் கேட்டால், இதோபதேசத்துடன் சென்றிடும் அவர்தம் குழாத்தில், இந்த அரிய பண்பு முகிழ்த்துள்ளது மனமகிழ்ச்சிக்குரிய விஷயமே!

ரூபாய் ஆயிரம் ஆயிரமாக அள்ளிக் கொடுத்தாலும், தோழர் கருப்பையாவின் அன்னையின் கண்களிலிருந்து வழியும் கண்ணீரைத் தடுத்திடும் சக்தி, அதற்குக் கிடையாது. சுந்தரமாக உலவவேண்டிய இளைஞர்களைப் பலி கொடுத்த தாய் தந்தையரின் இதயங்கள் படும் பாட்டை—தேசியக் கட்சியினர்—இப்போதுதான் உணர்வதாகத் தெரிகிறது. ஆனால், இந்தக் கண்ணீராவிக் கோலத்தை, கடந்த பல ஆண்டுகளாகக் கண்டு வருகிறோம், நாம்! நெல்லிக்குப்பம் சென்று, மாண்ட மஜீதின், தாய் தந்தையரைக் கண்டபோது—நமது பொதுச் செயலாளரிடம் அவர்கள் கதறிய காட்சியைக் கண்டபொழுது—கண் கலங்க நின்றோம்! வண்ணாரப்பேட்டை பாண்டியன், படுகொலை செய்யப்பட்டபின், அவர்தம் இல்லத்துணைவி, விதவையாகவும்—குழந்தைகள் தேம்பியவாறும்—நின்ற கோலத்தைக் கண்டபோது, குமுறினோம்! நமது பொதுச் செயலாளர், கண் கலங்கினார்!!

இந்த அரசியல் படுகொலைக் காட்சிகளைக் கண்ணாரக் கண்டு—மனம் நொந்த நமக்கு — தோழர் கருப்பையாவின் இல்லத்தில், எத்தகைய குமுறலும் கொந்தளிப்பும் இருக்கிறதென்பதை, நன்கு அறிய முடியும். இந்நேரம், நமது சிறையில் கிடக்கும் பொதுச்செயலாளர், வெளியிலிருந்திருந்தால், கண்ணீர் விடும் குடும்பத்தைக் கண்டிருக்கலாம்—"தாயே! என் சகோதரன்தான் கருப்பையா. அரசியல் ஆத்திரக்காரர்கள் மூட்டிய 'தீ'யினுக்கு அநியாயமாகப் பலியாகிவிட்டார். இந்த ஆத்திரமூட்டுவோர் கொட்டம் அடக்க என்னாலானதைச் செய்கிறேன்" என்று தெரிவித்துமிருக்கலாம். அந்நிலை இல்லை. அவர், சிறையில்.

இந்நிலையில், அவதியுறும் அவர் தம் குடும்பத்தாருக்கு, அரசியல் அதிபர் பண்டிதரும்-அவர்தம் தூதர் ஆச்சாரியாரும்-நன்கொடை வழங்கியுள்ளார்கள். நண்பர் காமராஜ், நிதி சேர்த்துதவ முன்வந்திருக்கிறார். இதுபோன்ற முயற்சிகளில், எடுத்ததை முடிக்கும் பண்பு பெற்றவர்—அவர். ஆகவே, கருப்பையாவின் குடும்பக் கலக்கம் தீர, வழி செய்வார் என்ற நம்பிக்கை கிடைத்திருக்கிறது. வரவேற்கிறோம்.

*

அகில உலக சிக்கல்களை அவிழ்த்திடும் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் பண்டிதர், ரூபாய் ஆயிரம் அனுப்பியிருக்கிறாரெனில், அதற்குள்ள முக்கியத்தை, மூடி மறைக்க விரும்பவில்லை—நாம்.

'இந்து'வும் பிற ஏடுகளும் இந்தச் செய்தியை எவ்வளவு பரபரப்போடு வெளியிட்டுள்ளனவோ, இதுபோல, இச்செய்தியை வெளிநாடுகளில் பரப்பவும், வசதிகள் உண்டு.

இச்செயல் புரிந்த அவரை, நாம் பாராட்டுவதுபோல—ஆங்காங்குள்ளோரும் பாராட்டத் தவறார்.

ஆனால்—இந்தப் பாராட்டுதலைப் பெறுவதற்காகவும், 'எவ்வளவு பெரியவர், எல்லா விஷயங்களையும் கவனிக்கிறார்!' எனும் விளம்பரத்துக்காகவும், இத் தொகையினை அவர் அனுப்பியிருப்பார்—என்று கூறவில்லை, நாம். அத்தகைய துர்மதி இல்லை, நமக்கு

கருப்பையாவின் உயிர் போனதைக் குறித்து, கலங்கி, இத்தொகையினை அனுப்பியிருக்கலாம் — அப்படி அனுப்புவதும் வியப்புக்குரியதல்ல. இதுநாள்வரை, இத்தகைய செயலை, அவர் செய்து காட்டாதது வேண்டுமானால் வியப்புக்குரியதாக இருக்கலாமே ஒழிய, இது ஒன்றும் வியப்புக்குரியதல்ல. ஏனெனில், பண்டிதர் அரசியல் அதிபர் மட்டுமல்ல—காங்கிரசின் தலைவரும்கூட.

தலைவர், தம் கட்சித் தோழருக்கேற்பட்ட துயர் துடைக்க முன்வந்தது—சீரிய, செயல். எனவே, சிந்தை மகிழ்கிறோம்.

இதுநாள் வரை, இதுபோல் நடைபெறாமல், இப்போது மட்டும், ஆரம்பமாகிறது. எனவே, முக்கியத்துவம் பெறுகிறது.

பண்டிதர் அளித்த ரூபாய் ஆயிரத்துக்கும் வாயிருந்தால், பலப்பல சொல்லும்! 'செக்'கை எடுத்து

கையெழுத்துப் போடுமுன், ஒரு [illegible]மிடம், அவரது உள்ளம், சிந்திக்கா[illegible]லிருந்திருக்காது. ஆயிரம், அளித்[illegible]ர்!—அகமகிழ்கிறோம். ஏனெனில், [illegible]தற்கிளிருப்போருக்கு, இது போன்ற 'சிறு நன்றி' கூட, வடக்கு [illegible]லைவர்கள் வழங்கியதில்லை! ஆனல், தோழர் கருப்பையா பிணமான செய்தி கண்டதும், ஆயிரம் அனுப்[illegible]ப்பட்டிருக்கிறது!!

இதுவரை, நடைபெறாதது—இப்போது மட்டும், எப்படி அரும்[illegible]யது.

சென்னைத் தலைவர்கள் 'டிரங்—கால்' மூலம்—செய்தியைச் செப்பியிருக்கலாம். ஆனல், அச் செய்தி [illegible]ண்டதும், 'ஆயிரத்தை' அனுப்பிய[illegible]தேன்— அவர்.

சிந்தனைக் குரிய விஷயம் — அதிலும், முக்யத்துவம் பெறும் விஷயம் எனவே, மூளைக்கு வேலை கொடுக்க விரும்புகிறோம்.

*

[illegible]வீண் கர்வத்தால், விவேக[illegible]மிழந்து, குருதி குடிப்பதே வீர[illegible]மென நினைந்து குத்துச் சண்டைகளும் கோணங்கிச் சேட்டைகளும் நடத்திய ரோமாபுரியின் சரித[illegible]ட்டிலே, குறிப்பிடத்தக்க விஷயம்—மாவீரன் சீசரை, மறைந்திருந்து தோழர்கள் கொலை செய்தபின், அப்பிணத்தை மக்கள் மத்தியில் வைத்து, அந்தோணி யென்பான் செய்த வீரமுழக்கமாகும்! அம்முழக்கத்தாலேயே மக்களின் சினத்தைக் கிளறிவிட முடிந்தது!!

அந்தோணியின் இடத்தில், நேரு அனுப்பிய 'ஆயிரத்தை', கொண்டு வைக்கத் துடிக்கின்றனர் — இங்குள்ளோர். அதனால்தான், பண்டிதரிடமிருந்து, ஆயிரத்தைப் பெற்றிருக்கின்றனர். அவரும், அகமகிழ்ந்து, அனுப்பியிருக்கிறார்.

தோழர் கருப்பையா — கொலையுண்டது உண்மை—அவர் குருதி [illegible]திருவிட மண்ணில் குழைந்ததும் உண்மை—குடும்பம் கலங்க இறந்ததும், உண்மை—இந்தக் கொடுஞ்செயலுக்கு, ஆத்திரக்காரர்கள் மூட்டிய தீயே, காரணம் என்பதும் உண்மை—இந்த ஆத்திரக்காரர்கள் பண்டிதரின் விஜயத்தைப் பயன்படுத்த முனைந்ததும் உண்மை—இதனல், சைதாப்பேட்டையில், மதுரையில், மவுண்ட் ரோட்டில், கோவையில், மேட்டுப்பாளையத்தில் கழக தோழர்களின் குருதியை மண்ணில் ஓடவிட்டதும் உண்மை.

இந்த உண்மைகளை அறிவார், பண்டிதர்—ஒரு சொல், உதிர்க்கவில்லை—ஆனல், 'ஆயிரம்' அனுப்பியிருக்கிறார்.

மஜீது கொலை—

பாண்டியன் படுகொலை—

வேலாயுதம், படுகொலை—

இதுபோலப் பல்பல கொடுமைகளை, தி. மு. க. ஏந்திய து—மஜீதும் பாண்டியனும் வேலாயுதமும் பண்டிதர் கூறும் பாரதமாதாவின் மடியில் தவழ்ந்தவர்கள்தான்— அவர்களது படுகொலை கேட்டு, 'ஆயிரம்' அல்ல —ஒரு அனுதாபச் சொல், கண்டனக் குரல் கூட உதிர்க்கவில்லை, பண்டிதர். "அவர், காங்கிரஸ் தலைவராயிற்றே! திமுகவினர், செத்தால் அவருக்கென்ன?" எனலாம், சிந்தா நடை பயில்வோர். அவர், காங்கிரஸ் தலைவர் மட்டுமல்ல—அரசியல் அதிபருமாவார்!! ஆயினும், ஒரு சொல், உதிர்த்ததில்லை. ஆனல், இன்று, 'ஆயிரம் அனுப்புகிறார்!'

கருப்பையாவுக்குச் செய்தது போல, மஜீதுக்கேன் செய்யவில்லை—இவ்வண்ணம் கேட்கவில்லை, நாம். ஏதோ, எம்மாலானதைச் செய்தோம்! ஆனல் அந்தக் கொலைகளுக்குக் காரணமானவர்கள் காங்கிரஸ் தோழர்கள் என்பதறிந்தும் கண்டித்தாரில்லை, இக் கண்ணியவான்! வழக்குகள் யாவும், தோற்றன! கொலை செய்தோரெல்லாம், விடுவிக்கப்பட்டனர்!!

இதுகுறித்து எதுவும் கூறாதவர், இன்று 'ஆயிரம்' அனுப்புகிறார்.

அவரிடமிருந்து நமது சகோதரனின் குடும்பத்துக்கும் பணம் வருவது கேட்டு—மிகவும் மகிழ்கிறோம்.

ஆனல், இன்று ஏற்பட்ட, இந்த பச்சாதாபம், அன்றேன் ஏற்படவில்லை? இன்று கொடுக்கப்படும், இந்த முக்யத்துவம், அன்றேன் அளிக்கப்படவில்லை?

பணமல்ல!—ஒரு பரிவுவார்த்தை வந்ததா? வழங்கினரா?

இல்லையே! இருந்தும், இன்று மட்டும், அவரது அகில உலகக் கவனம், ஆழமாகத் திரும்பியிருப்பதேன்?

காங்கிரஸ் தலைவர்கள் — குறிப்பாக ஆச்சாரியார்—கருப்பையாவின் பிணத்தைக் காட்டி, பழிவாங்க முயல்கிறார்!

இந்தப் பழிக்கு, பண்டிதரின் 'பணத்தை', ரோமாபுரியின் அந்தோணியாக்க விரும்புகிறார்.

'புருடஸ்' இடத்தில், நாம் இல்லை —இதனை, நாடறியும்.

இன்னா செய்தார்க்கும் இனியவை செய்து, அவர் நாணும் வழியில் பணிபுரியும், பண்புள்ள கழகத் தோழர்—நாம்.

ஆனல், நம்மைப் பழிவாங்கும், முயற்சியில் 'நமது தேசீயச் சகோதரர்களைத் தூண்டிவிட, திட்டம், திட்டப்படுகிறது. அதில் ஒரு கட்டமே, 'ஆயிரம் வரவு.'

அன்பர் பண்டிதரின் உள்ளத்தில், தி. மு. க. வைப்பற்றிய எண்ணம், குழப்ப ஆரம்பித்துவிட்டது.

அவர், இங்கு வந்து சென்றபின், தி. மு. க.வின் சக்தியை, நன்ருக உணர்ந்துவிட்டார்.

அதனுலேயே, பம்பாயில் சென்று பேசியபோதும். நம்மை இழுத்துப் பேசத் தயங்கவில்லை.

நம்மைத் தட்டிக் கேட்க ஒரு சமூகம் உருவாகிவிட்டது!

'நான்சென்ஸ்!' — என்றோம். அதற்கு, நாட்டை, கண்டிக்குமாறு செய்துவிட்டார்கள்.

நமது நண்பர் ஆச்சாரியார்— அவரது ஆட்சியைப் பிடிக்கவில்லை என்கிறார்கள்.

துப்பாக்கி தூக்கினேம்—அஞ்சவில்லை, அக்கூட்டம்!

அதனை, எப்படி அழிப்பது! எப்

கல்லக்குடி

அறப்போர்

—

நூறு நாட்கள் ஆகிவிட்டன!

*

பதிலில்லை!—பேச்சில்லை!!

*

இது; ஜனநாயக சர்க்காரா?

*

நேர்மையாளரே, பதில் சொல்வீர்!

படி ஒழிப்பது!!—இவ்விதமாக, பண்டிதர், பயம் கொள்ள ஆரம்பித்து விட்டார்.

அதனுற்றான், பணம் அனுப்புகிறார்—பரவசச் செய்தியாகக் கருதுகின்றன, தேசிய ஏடுகள்.

அவர் அனுப்பும் பணம்,தேசியத் தோழர்களின் சிந்தையைக் கிளறி, அவர்களையெல்லாம் புது முறுக்கு கொள்ளச் செய்யும் என்று, பூரிக்கின்றனர்—இங்குள்ள ஆத்திரக்காரர்கள்.

இதில், முதலிடம், வகிக்கிறார்—அன்பர் ஆச்சாரியார்.

இந்த இருபெருந் தலைவர்களும், திராவிடத்தில், 'குருக்ஷேத்திரம்' காண முயல்கின்றனர். அவ்வண்ணம் நேரிடின் ஆதரவளிக்க நானிருக்கிறேன் — என்கிறார், நேரு! 'ஆமாம் — அஞ்சாதீர்' என்கிறார், 'ஆயிரத்தை' வரவு வைப்பவர்!!

அவர்கள் கருதுவது போல — திராவிடம், 'ரோமாபுரி'யாக ஆக முடியாது—திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைசி மூச்சு இருக்கும் வரையிலும், 'புரூடஸ்'களும் 'சீசர்'களும் ஏற்படவிடோம்.

எவனோ ஒரு ஆத்திரக்காரன், கருப்பையாவின் உயிரைப் பலி கொண்டுவிட்டான்.

இந்த ஆத்திரக்காரனின் வெறிச் செயலை, காங்கிரஸ் ஏடுகளும் தலைவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது சுமத்த முன் வருகின்றனர்.

இந்த முயற்சியில் ஆச்சாரியாரும் அவர்தம் குழாமும் ஈடுபட நினைப்பதில், ஆச்சரியமில்லை.

ஆனால், இன்னும் சிலரும், அவ்வண்ணம் கருதுகின்றனர்.

அவர்கள், நம்மை அறிந்தவர்கள் நமது பொதுச்செயலாளரை அறிந்தவர்கள்!!

அவர்கள், ஆச்சாரியாரைப்போல ஆத்திரக்காரர்களல்ல—அந்த தேசிய திராவிடச் சகோதரர்களின், சிந்தைக்கு வைக்கிறோம்.

"தி. மு. க. அன்பு மார்க்கம் செல்வது"

அதனை நாடு அறியும்! நீங்களும் அறிவீர்கள்!!

ஆனால் ஆத்திரத்தின் காரணமாக ஆச்சாரியாரும் அவர் கூட்டமும் பழிசூட்ட முயல்கிறார்கள்.

பழி சூட்டியே, பழக்கமும் பெற்றவர்கள்.

எனவே, பழியை, வீசுகிறார்கள்! அதன்மூலம், ஆத்திரத்தைக் கிளறுகிறார்கள்!!

அவர்கள் 'ஆத்திரக்காரர்'களாக மாறியதால்தான் கருப்பையா — எனும் காளையை நம்மிடமிருந்து, இழந்தோம்.

அந்த அரசியல் ஆத்திரக்காரர்களின் வஞ்சகத்துக்கு 'அகில உலக ஜோதி'யின் துணையும் தேடப்பட்டு—கிடைத்து வருகிறது.

இதன் காட்சிதான், 'ஆயிரம் வரவு!'

இந்த 'வரவு' — விபரீதங்களைச் சிருஷ்டிக்காமலிருக்க விரும்புகிறோம்! ஏனெனில் அரசுத் தலைவரே அதிசிரத்தை காட்டுகிறார் எனில்—வேண்டுமென்றே நம்மவர்களைப் பிடித்துக் கூண்டிலேற்ற, கொக்கரிக்கலாம்—ஆச்சாரியார் சர்க்கார்.

இந்தப் பாதைக்கு இழுத்துச் செல்லும் எண்ணத்துடனேயே, 'ஆயிரம்'—கேட்டு - அனுப்பப்பட்டிருக்கிறது.

கலங்கும் கருப்பையாவின் குடும்பத்துக்கு, இந்த வரவுகிடைத்தமை —அதிலும் வடநாட்டுத் தலைவரிடமிருந்துவந்தமை—தி. மு. க. வின், உள்ளத்தில் நிச்சயம் களிப்பையே தரும். அந்த வகையில், இந்த 'வரவை' வரவேற்கிறோம். ஆனால், இது, ஆபத்துகளைச் சிருஷ்டிக்காமலிருக்கவேண்டுமே எனவும்அஞ்சுகிறோம்.

'ஆயிரம் வரவு' கண்ட அரசியல் ஆத்திரக்காரர்களின் தீயமதி, நம் தோழர்கள்மீது, 'தேனீ' நடத்தத் தூண்டலாம். 'குருக்ஷேத்ரம்' — சிருஷ்டிக்கும் ஆர்வத்தைத்தரலாம்.

அவ்வண்ணம் நேராமல், அமைதியும் அன்பும், அரசியலில் நிலவுமாறு செய்வது, திருவிடத்தாரின் கடமையாகும்

இதனை, ஆச்சாரியார் விரும்பார்—ஏனெனில், ஆத்திரக்காரர்களின் 'அரசர்' அவர்.

ஆனால் அவரின் சூதுள்ளத்தை அறிந்த தோழர்கள் — அவர்கள் எக்கட்சியிருந்தாலும் — முன்வரக் கோருகிறோம்.

அன்பே, வெல்லும்!

ஆத்திரம், அழியும்!!

★

★ தம்பி ★

நண்பர் தில்லை வில்லாளன் அவர்களால் துவக்கப்பட்டு சிதம்பரத்திலிருந்து வெளிவரும் 'தம்பி' இதழினைக் கண்டோம்.

மாற்றாரின் உள்ளத்தைத் தம்பால் இழுக்கும் எழுத்துக்களும், சிறுகதைகளும், உரையாடல்களும் 'தம்பி', செந்தமிழ் முரசு கொட்டுகிறது.

தில்லை-வில்லாளன்—திராவிட இயக்க எழுத்தாளர்களில், சிறந்தோர், இடம் பெற்றவர். நாவன்மையும், இயக்க வீரமும், நிறைந்தவர். அண்ணாமலைப்பல் கலைக்கழகம் தந்த, அருஞ்செல்வங்களுள், ஒருவர். நமது ஏட்டிலும் துணை ஆசிரியராகப்பணியாற்றியவர். சுமார் 50க்கு மேற்பட்ட நாவல்களின், ஆசிரியர்.

அவரை ஆசிரியராகக்கொண்டு திகழும் 'தம்பி'—செந்தேன் சொட்டும், சிந்தனைக் கருத்துக்களோடு திகழ்வதைக் காணப்பெரிதும் மகிழ்கிறோம்.

இத்தகைய ஏடுகள், வளர்ந்து வரும் நமது கழகத்துக்கு, மிகமிகத் தேவையென்பதை மக்கள் அறிவர். அதிலும், ஆங்காங்குமுள்ள, இயக்க முகாம்களிலிருந்து, இத்தகைய ஏடுகள் புறப்படுவது—கழக ஆக்கத்துக்கும், கழக வீரர்களின் ஊக்கத்துக்கும் மிக மிக இன்றியமையாததாகும்.

மாணவர்கள் பகுதி — மகளிர் பகுதி — முதலியவைகளோடும், 'தம்பி' மிளிர்கிறது.

'தம்பி' — தளிர் நடைபோட்டு வளர, வழி செய்யும் பொறுப்பு, தாயகத்தோரின் கையிலிருக்கிறது. தாயகம் விடுதலைப் பெற 'தம்பிகள்' வளரவேண்டும். வளர்ந்தால்தான், வளம் காணமுடியும்.

இத்தகைய வளர்ச்சிக்கானஉதவிகளை 'தம்பி'க்குக் கழகத் தோழர்கள் அளிக்கத் தவறார்.

அவரது முயற்சியை வாழ்த்துகிறோம்! தம்பி வாழ்க! வளர்க!!

'தம்பி' — வாரஏடு, விலை அணா 2 தான்.

'தம்பி — சிதம்பரம்' என்பதே முகவரி.

★

"அப்பா, எங்கே?"

'சின்னஞ் சிறு குழந்தைகளாகிய நாங்கள் திகைத்துக் கிடக்கிறோம், அம்மா.

தங்கை ஜானிமா—அழுதபடி நிற்கிறாள். அவளுக்குச் சோறூட்ட — துணிமணி உடுத்த — யாருமில்லை. மழலைப் பருவம்! வாய் திறந்தும், அழமுடியாத வயது. வாடுகிறாள், அம்மா, வதைகிறாள்.

நானோ, சின்னஞ் சிறுவன். ஓடியாடிச்சம்பாதிக்கும்வயதுமல்ல, என் நிலை. செய்வகை அறியாது, திகைக்கிறேன். தேம்பியழுதபடி, நிற்கிறேன்.

எங்களைக் காப்பாற்றவேண்டிய தாயோ, படுக்கையில் கிடக்கிறாள். ஒருநாள்—இரண்டு நாளல்ல — பதினைந்து மாதங்களாக. அவரது வியாதியோ, நாள்தோறும் அதிகரித்தபடி இருக்கிறது. உடல் மெலிந்து கிடக்கிறாள். "இன்றோ, நாளையோ!" என்று வைத்யர்கள் கூறுகிறார்கள்.

எங்கள் அன்னை இறந்து விடுவார்களாம்! வளரும் மலர்கள் நாங்கள், இம்மாபெரும் உலகில் அனாதைகளாக்கப்பட்டு விடுவோமாம் அம்மா!!

சின்னஞ் சிறு குழந்தைகள் நாங்கள், என்ன செய்ய முடியும்?

இரவும், பகலும், தாயின் பக்கத்திலே, கிடக்கிறோம்.

என் தாய், பிரக்ஞை இழந்த போது, பிதற்றுகிறார் — 'எங்கே, அவர்? இன்னும் வரவில்லையா!' என்று.

'அவர்' என்று எங்கள் அன்னை குறிப்பிடுவது, எங்கள் தந்தையைத்தான்! மரணப் படுக்கையில் கிடக்கும் மனைவியைப் பார்க்கவும் வரவில்லை என் தந்தை.

எங்கள் அப்பாவுக்கும், அம்மாவுக்கும், சண்டையில்லை —கோபம், கிடையாது.

ஊருக்குள் சென்றால், எங்கள் அப்பாவின் பெயரைச் சொல்லி, 'வாழ்க! வாழ்க!!' என்று மக்கள் கூச்சலிடுகிறார்கள்.

*

நீதிமான்—தியாகி — தன்னலமற்றவர்—இவ்வண்ணம் அல்ஜீரியநாட்டு மக்கள் அவரை, அர்ச்சிக்கிறார்கள்.

எனது அன்னையும் அவரும், என்னையும் என் தங்கையும், தூக்கிக் கொண்டு, கொஞ்சிய காட்சி, என் நினைவிலிருக்கிறது.

எங்கள் நாட்டுக்குத் தெற்கே, சகாரா பாலைவனம், இருக்கிறது. அதனைச் சுட்டிக் காட்டி, 'அல்ஜீரிய மக்களின் வாழ்வு இந்தப்பாலைவனம் போல் கிடக்கிறது' என்று எங்கள் அப்பா, மக்களிடம் பேசினாராம்.

அப்படிப் பேசுவது, எங்கள் அரசாங்கத்துக்குப் பிடிக்கவில்லையாம்.

தன்நாட்டின் வறுமையைப் பேசுவது, தகாத செயலாம்.

எங்கள் அப்பாவை, இழுத்துச் சென்றுவிட்டது அரசாங்கம்.

பதினைந்து மாதங்களுக்குமுன்பு நடைபெற்ற சம்பவம். அன்று 'ஐயோ!' என்றலறி வீழ்ந்தாள் என் தாய்! அன்று முதல் படுக்கையில் கிடக்கிறாள்!!

எங்கள் தந்தை, இந்த நாட்டிலிருந்தால் ஆபத்தாம்—அவர், தீப்பொறியாம் — புரட்சி மூண்டுவிடுமாம்—சர்க்கார், சொல்கிறது!

அவரை, எங்கள் நாட்டைவிட்டு, எங்கோ, வெளிநாட்டில் கொண்டு போய் விட்டுவிட்டார்கள்.

அவர், இங்கே வரக்கூடாதாம்!

தேசப் பிரஷ்டம், செய்யப்பட்டிருக்கிறாராம்!!

அம்மா! ஐக்கிய நாடுகள் சபையின் தலைவராக இருக்கும் விஜயலட்சுமி தாயே!! எங்களைக் கொஞ்சம், பாருங்கள்.

அப்பா திரும்பி வந்தால், அந்த மகிழ்ச்சியில், அன்னை பிழைத்துக் கொண்டாலும், பிழைத்துக்கொள்ளலாம்.

அவரை திரும்பி வரச் செய்யுங்கள்! தாங்கள், உலகத் தலைவியாமே —இந்த ஒத்தாசையைச் செய்யுங்கள்.

துர்ப்பாக்கியமான நிலைக்கு, துரைத்தனத்தால் ஆளாக்கப்பட்ட இந்த அனாதைகளுக்கு' அருள்புரியுங்கள்.

உங்கள் ஆதரவை நாடும்,

அலிமேஸாலி.

*

கல்லையும் கரைக்கக் கூடிய, இந்தக் கடிதம், கடந்தவாரம் ஐக்கிய நாடுகள் சபையின் தலைவியான தோழியர் விசயலட்சுமி தேவியாருக்குச் சென்றிருக்கிறது.

சிறு குழந்தைகளான ஜானிமா, அலி எனும் இருவர், இக்கடிதத்தைத் தீட்டியிருக்கிறார்கள். அவர்களது தந்தையான மேஸாலி ஹட்ஜ், அல்ஜீரிய சர்க்காரால், நாடுகடத்தப்பட்டிருக்கிறார். அவரை, தாயகம் திரும்பிவரச் செய்து, படுக்கையில் கிடக்கும் தாய்க்கு மரணப் பிச்சை வழங்குமாறு, உலக நாடுகளின் ஸ்தாபனத்தை, குழந்தைகள் வேண்டுகின்றன.

மேஸாலி ஹட்ஜ்—அல்ஜீரிய மக்களின், சுதந்திர வீரன். அல்ஜீரிய தேசீய இயக்கத்தின், தலைவர், அவர். தாயக மக்களின் வாழ்வு, தணலில் புழுப்போல், உருகி, மண்ணாவதைக் கண்டு, மனம் வெதும்பி, அவர்கள் நல்வாழ்வுக்காகப் போர்க்கொடியேந்தினார். அவரது விடுதலைக் குரல் கேட்ட, ஆதிக்கபுரியினர், அவரை நாட்டை விட்டே ஓட்டி விட்டார்கள்.

அவர், அல்ஜீரியாவில், இருந்தால், சுதந்திர கீதம், ஒலிக்குமாம்.

ஆகவே, அவரது உருவை, அங்கிருந்து பலாத்காரமாக, அகற்றி விட்டது, சர்க்கார்.

கணவனைப் பிரிந்த துணைவி, படுக்கையில் சாய்ந்தார்! பதறிக்கிடக்கின்றன, குழந்தைகள்!!

பெற்றவள்—மரணப் படுக்கையில். அவளைக்காணவோ, தந்தைவர முடியாது — சட்டம், தடுக்கிறது. குழந்தைகளோ, குமுறிக்கிடக்கின்றன.

இந்தக் குமுறலின் விளைவாகத்தான், கடிதமொன்று போயிருக்கிறது, ஐ. நா. சபைத் தலைவருக்கு.

அந்தக் கடிதம் பற்றிக் கேள்விப் பட்ட ஈராக் நாட்டுப் பிரதிநிதி தோழியர் பாதியா அப்னன், துடித்தாராம். விஜயலட்சுமியிடம் சென்றாராம், "தலைவியே! தளிர் மலர்கள் போன்ற, அந்தக் குழந்தைகளின் குரலை, சபைமுன் வையுங்கள். தாங்களும், குழந்தை பெற்றவர்களன்றோ?", என்று கூறினாராம்.

விஜயலட்சுமியின் முகத்திலும் வேதனை தென்பட்டதாம்.

தந்தையைப் பிரிந்து, தாயையும் இழக்கும் நிலையில், தவிக்கும் அந்தக் குழந்தைகளின் நிலையைக் கேள்வியுற்றால், கொடுங்கோலனும், கண்ணீர் சிந்துவானே!

குழந்தைகளின் குமுறலைக்கண்ட, ஆசிய — ஆப்பிரிக்கப் பிரதிநிதிகள், இது குறித்து ஐ. நா. சபையில் கோரிக்கை கிளப்ப முடிவு செய்திருக்கின்றனர்.

தோழர் ஹட்ஜ்—கொலைகாரரல்ல, நாட்டைக் காட்டிக்கொடுத்தவரல்ல, தன்னாட்டு மக்கள் இன்பமாக வாழவேண்டுமென விரும்பியவர்! தாயகத்தை தளிர்மலர்ச் சோலையாக்க விரும்பினார் — துரத்தப்பட்டார்—துடிக்கும் மனைவியையும் சந்திக்க வாய்ப்பில்லை. அவர், வெளி நாட்டில்! மனைவியோ, அல்ஜீரியாவில்!!

தவிக்கும் குழந்தைகளையும், கலங்கும் காதலியையும், கண்ணீர் சிந்தும் தாய் தந்தையரையும் விட்டு, விடுதலை வீரர்கள் பிரிக்கப்படுவதென்பது, ஆதிபத்ய ஆட்சியில், சாதாரண சம்பவமாகும்.

இத்தகைய சம்பவங்களை அதிகரித்துக் கொண்டே போனதால் தான், வெள்ளையன், இந்தப் பூபாகத்தைவிட்டு வெளியேறநேர்ந்தது.

குழந்தைகளின் கடிதத்தைக் கண்டதும், இந்த நினைவுகள் மின்னியதால்தான், விஜயலட்சுமியார், முகத்தில் வேதனை, தென்பட்டது போலும்.

விஜயலட்சுமியாரின் கரங்களில், வேதனையால் வாடும், இருகுழந்தைகளின் கடிதம்!

இது, அங்கே! அமெரிக்காவில்!!!

இங்கோ—அவரது அண்ணன் பண்டித நேருவின் கரத்தில், கடிதங்களல்ல; கண்ணீர்த் துளிகள் கொட்டிக்கொண்டிருக்கின்றன.

"தாயகம் வாழ்க!" — எனும், முழக்கம் எழுப்பியதற்காக, மெஸாலிஹட்ஜ், தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார்.

"தாயகம் வாழ்க!" — எனும் அதே முழக்கத்தை எழுப்பியதற்காக, இங்கே, தி. மு. க. தோழர்கள், நூற்றுக் கணக்கில், சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

தவிக்கும் குழந்தைகளின் கடிதம் விஜயலட்சுமியார் கையில்.

தவிக்கும் குழந்தைகளின் செய்திகள் தாங்கிய ஏடுகள், டில்லிக் காரியாலயத்தில்.

அல்ஜீரிய சுதந்திர வீரனின் குழந்தைகள், தந்தையைக் காணாது, தவிக்கின்றன.

இங்கே, தூத்துக்குடியில் வழக்குக் கொண்டுவரப்பட்ட தந்தையைக் கண்ட குழந்தை, 'அப்பா!' என்று தாவ, சுதந்திர வீரனை போலீசார் இழுத்துச் சென்று லாரிக்குள் தள்ளுகிறார்கள். குழந்தையைத் தொடவும் முடியவில்லை!

"அப்பா! அப்பா!!" — என்று குழந்தைகள் அலறுகிறார்கள்.

'எங்கே அப்பா, போய்விட்டாய்?' —என்று மழலை மொழியில் கேட்கின்றன.

குழந்தைகள் சிந்தும் கண்ணீரைக் கண்டால், காதகனின் நெஞ்சமும் உருகுமாம்.

நூற்றுக்கணக்கில் சிறையில் வாடும், நம்முடைய தியாக வீரர்களின் இல்லங்களிலெல்லாம், 'அப்பா எங்கே?' என்று அழுகுரலோடு கேட்கும், குழந்தைகளின் நிலையைக் கூறமுடியாது.

அதனாற்றான், அல்ஜீரியக் குழந்தைகளின் கடிதம் கண்ட விஜயலட்சுமி, வேதனைப்பட்டிருக்கிறார்.

வேதனை, படருகிறது முகத்தில்! அமெரிக்காவில், இருப்பதால்!!

இங்கே, மிரட்டல் தென்படுகிறது நேருவின் முகத்தில்!

விஜயலட்சுமியின் முகத்தில் வேதனை படர்ந்ததை இங்குள்ள ஏடுகள், பெரிதாகப் பிரசுரித்துள்ளன — அவர், ஐ. நா. தலைவி என்பதால். அதன்மூலம் அவருடைய சுதந்திர தாகத்தையும், பெருமிதத்தையும் பூரிப்போடு வெளியிடுகின்றன!

"பார்! பார்!! எங்கள் விசயலட்சுமியை—தேசப் பிரஷ்டம் செய்யப்பட்ட தந்தையைக் குறித்து குழந்தைகள் தீட்டிய கடிதம் கண்டதும் — அனலிடை மெழுகானார், எம் தேவி!" என்று பம்பாய் ஏடொன்று பரவசத்தோடு, குறிப்பிட்டிருக்கிறது.

"இத்தகைய சுதந்தர வீரர்களைப் பெற்றளித்தது எமது பாரதபூமி — தெரியுமோ?" என்று, நிமிர்ந்த மார்புடன், பெருமை பாடுவோரும் இருக்கிறார்கள்,

பாடட்டும்! போற்றட்டும்! — ஆனால் அல்ஜீரியக் குழந்தைகள் விஷயத்தில், இவ்வளவு கவனமும் சிரத்தையும், சென்றதாகக் கூறப்படுகிறதே — அவரது சிந்தையில், தன் பூபாக மக்களின் குடிசைகளில் எழும்பும் கூக்குரல் விழவில்லையா?

அல்ஜீரிய சர்க்கார், மெஸாலி ஹட்ஜ்மீது, அடக்கு முறையை வீசியது.

விஜயலட்சுமியின் அண்ணன்சர்க்கார், இங்கே நம்மீது அடக்குமுறைகளை அள்ளியள்ளி, வீசுகிறது — வீசுவது போதாதென்று விவேகி நேருவே தூண்டுகிறார், ஆச்சாரியாரை.

அல்ஜீரிய அடக்கு முறைக்கும், பண்டிதரின் அடக்கு முறைக்கும் வித்யாசம் என்ன?

அங்கும் அடக்கு முறை—ஏன்? நாட்டு நல்வாழ்வைக் கோரினர்.
இங்கும் அடக்குமுறை—ஏன்? நாட்டு நல்வாழ்வைக் கோருகிறார்கள்!

இந்தக் குற்றச்சாட்டுகளை வீசி கூண்டுக்குள் கொண்டுபோய்த் தள்ளி வர்களைப் பூட்டுவதாலும், தேசத்தை விட்டு விரட்டுவதாலும், சுதந்திரத் தீ, அணைந்துவிடவா, முடியும்?

இன்று, "அப்பா! அப்பா!!" — என்று கதறும், குழந்தைகளின் அரும்பு உள்ளத்திலேயே, சுதந்திரக் கனலை, மூட்டுகின்றனரே — நாளை, இந்தக் கனல், மாபெரும் ஜோதியாக, உருவாகாமலா இருக்கும்!

உணர மறுக்கின்றனர்—அதனால் உறுமுகின்றனர்.

இளங் கொழுந்துகளின் கண்ணீர்த்துளிகள், கோழையையும் வீரனாக்கும்! குடும்பத்தையும் நல்வாழ்வுக்குப் போராடத் தூண்டும்!!

*

அணையா விளக்கு

நம் நாட்களிலே, அறிவுத்துறையிலே பெரியதோர் புரட்சி ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. இதன் காரணமாக, ஆதிக்கக்காரர்களுக்கு அச்சம் பிறந்திருக்கிறது.

முதலிலே, அவர்கள் அலட்சியமாகத்தான் இருந்தனர் — இன்று அஞ்சுகின்றனர்.

அச்சம் காரணமாக, அவர்கள் மனம் குழம்பிப்போய், எதை எதையோ எண்ணுகிறார்கள் — எதை எதையோ கூறிக் கதறுகிறார்கள்.

இதுகள் பேச்சை யார் கேட்கிறார்கள்—என்ற காலம் கடந்துவிட்டது.

இதுகளுக்கு என்ன தெரியும் பேச—என்று கூறிய இறுமாப்பான சொல்லும் இடந் தெரியாமல் மறைந்துவிட்டது.

இதுகள் பேசி என்ன சாதிக்க முடியும்—என்ற ஆணவப் பேச்சும் அகன்றுவிட்டது.

இதுகள் ஆயிரம் காரணம் காட்டிப் பேசினாலும், நமது மூதாதையர்களின் மணிமொழிகளிலே ஒரு வாசகத்தின் முன்பு இதுகளுடைய பேச்சுநிற்குமோ — என்று வீம்பு பேசிய நாட்களும் போய்விட்டன.

இந்த ஜனங்கள் ஏன் இப்படிக்கும்பல் கூடி, இந்தக் குதர்க்கவாதிகளின் பேச்சைக் கேட்கின்றன — என்ற அலட்சியப் பேச்சும் போய்விட்டது.

இப்போது, இதுகளை எந்த வகையிலேனும் அழித்து ஒழித்துக்கட்ட வேண்டும் — என்று போர் முரசம் கொட்டும் காலம் பிறந்துவிட்டது—ஆளும்பொறுப்பை ஏற்றிருக்கும் ஆச்சாரியாருக்கும், அவர் தம் பாதந்தாங்கிகளுக்கும்.

*

துவக்கத்திலேயே, துரைத்தனம் நடத்துபவன், தன்னை எதிர்க்கும் துணிவு யாருக்கும் ஏற்படாது என்று ஆணவமாகவே, எண்ணுவது வாடிக்கை.

கொஞ்சம் கொஞ்சமாக, அவன் செவிக்கு எதிர்ப்பொலி வந்து சேரும்—ஏளனச்சிரிப்போடு இருப்பான், தன் வீரப் பிரதாபங்களையும், வெற்றிச் சிந்துகளையும் ஊரே முழக்கிக்கொண்டிருக்கும்போது, இந்த அற்ப எதிர்ப்பொலி என்ன செய்துவிட முடியும் என்றே எண்ணுவான். எதிர்ப்பொலி, தானாக மங்கி மடியும் என்று கருதி காலங்கழிப்பான் — அலட்சியப் புத்தியால்.

விழாக்களிலும், விருந்துகளிலும், கூட்டுத் தோழர்களுக்குப் பரிவு காட்டுவதிலும் காலங்கழித்த வண்ணம் ஆதிக்கக்காரன் உலவும்போது, எங்கோ கிளம்பிய எதிர்ப்பு, அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி, ஆனந்த அமளிச் சத்தத்தையும் அடக்கிவிடுமளவுக்கு வளரும்.

அலட்சியம் மடியும் — ஆத்திரம் பிறக்கும். குறும்புச் சிரிப்பு குறையும்—கொக்கரிப்பு ஆரம்பமாகும்.

முளையிலேயே கிள்ளி எறிந்திருக்கவேண்டும், செய்தோமில்லை. என்றாலும், என்ன? நமது சக்திக்கு முன்பு இந்த எதிர்ப்பு எம்மாத்திரம்! ஒரு விநாடியிலேயே எறும்பைப்போல நசுக்கிக் கருக்கிவிட முடியாதா என்ன — என்று ஆர்ப்பரிப்பான். அந்த ஆர்ப்பரிப்பு, தன்னை அடுத்து வாழ்வோர், அண்டிப் பிழைப்போர், எடுபிடி ஏவலர், பல்லிளித்துப் 'பக்ஷீஸ்' பெறுவோர், பாதந்தாங்கிகள், பராக் கூறுவோர் ஆகிய கூட்டத்தாருக்குத் தைரியம் ஊட்டப் பயன்படும்.

ஆர்ப்பரிக்கும் ஆதிக்கக்காரனுக்கு அண்டிப்பிழைக்கும் கூட்டம், தூபமிடும் — எதிர்ப்பை, ஒரு விநாடியிலே வீழ்த்திடச் செய்யும் ஆற்றல் உமக்கு உண்டு. அதற்கான அருந்திறன்கொண்ட ஆட்களும் கருவிகளும் உண்டு! ஐயனே, அவைகளை ஏவி, எதிர்ப்பை ஒழித்துக் கட்டுக! எமது உள்ளத்தைக் குளிரச்செய்க! —என்று கூறுவர். ஆதிக்கக்காரன், கட்டவிழ்த்துவிடுவான் — அடக்குமுறையை.

ஆனால், எதிர்ப்பு, நேர்மைக்காகவும், நீதிக்காகவும், மக்களின் நலனையே குறிக்கோளாகக்கொண்டதாகவும் இருப்பின், அடக்குமுறை ஓங்க ஓங்க, எதிர்ப்புச் சக்தியும் ஓங்கும்! ஒரு நொடியிலே அடக்கிவிடலாம் என்ற பேச்சுக் கவைக்குதவாததாகிவிடும். அடக்குமுறை கூர் மழுங்கும். இவ்வளவு எதிர்ப்பு இருக்குமென்று எதிர்பார்க்கவில்லை என்று ஆவேசத்துடன் பேசச் செய்யும்—ஆதிக்கக்காரனை.

ஆணவம், அலட்சியம், ஆர்ப்பரிப்பு, அடக்குமுறை, ஆயாசம் ஆகிய கட்டங்களைத் தாண்டி, ஆதிக்கக்காரன், அச்சம் எனும் கட்டம் வந்து சேருவான். பல்வேறு நாட்டு வரலாறுகளிலே காணப்படும் பாடம் அப்போது அவனுக்குப் புரிவதில்லை.

அலட்சியப் படுத்தப்படவேண்டியதாக, ஒரு காலத்திலே, தோன்றிய எதிர்ப்பு, இன்று தன்னிடமுள்ள அடக்குமுறைச் சாதனங்கள் அனைத்தையும் அளவு கடந்து வீசியும்கூட, அணையாத நெருப்பாக மாறிவிட்டதைக் கண்டு கலக்கமடைகிறான் — கலக்கம் அவன் கருத்தை, மேலும் குழப்புகிறது—காட்டி லுலவும் மிருகமாகிறான்!

மக்களின் நலனைக்கருதி அதனையே குறிக்கோளாகக் கொண்ட 'எதிர்ப்புச்சக்தி' மமதையாளனின் அடக்குமுறைகளைப் பொருட்படுத்தாமல் வளர ஆரம்பிக்கிறது.

ஆதிக்கக்காரன், அச்சங்கொண்டு, எதிர்ப்பைக் கருவறுக்க, புதுப் புதுச் சட்டங்களைப் போடவும், புதியவிதமான தண்டனைகளைக் கொடுக்கவும் முனைகிறான்.

வெள்ளம் வந்தபிறகு, அணை போடுவதுபோல—எதிர்ப்புச் சக்திகள்மீது ஏவப்படும் கருவிகள், எதிர்பார்த்த பலனைத் தராமல் போய்விடுகின்றன. மமதை மடிந்து, மருட்சி மூண்டுவிடுகிறது — ஆதிக்கக்காரன் மனதில்.

*

இம்முறையிலே, உலக வரலாற்றிலே—எண்ணற்ற போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

அரசு முறையிலே மாற்றங் காண்பதற்கான போராட்டங்கள், அறிவுத் துறையிலே பழைய கோட்பாடுகளை நீக்கி, புதுக் கோட்பாடுகளைப் புகுத்துவதற்கான முயற்சியின்போது மூண்டுவிடுகிறபோராட்டங்கள், எனும் பல்வேறு வகையான சமயங்களின்போதும், ஆதிக்கக்காரர்கள், எதிர்ப்புச் சக்தியினரை அழிக்க எண்ணற்ற முறைகளைக் கையாண்டனர்.

எனினும், சூதுமதியினரும், சுரண்டிப் பிழைப்போரும், சுகவாழ்வுக்காகப் பிறரைக் கசக்கிப்

பிழிவோரும், ஜாதி வெறியரும், பிறரும் வெற்றிபெறவில்லை. அவர்களுடைய பயங்கர ஆயுதங்கள் வெற்றியை அவர்களுக்குத் தரவில்லை. சிலருடைய வாழ்க்கையை வதைக்கமுடிந்தது, வஞ்சகர்களால். ஆனால், குறிக்கோளைக் கெடுத்தொழிக்க முடியவில்லை.

*

இது தெரிந்திருந்தும், தெளிவு பெறாத சிலர், இன்றைய நாட்களிலே, அறிவுத் துறையிலே, ஆதிக்கக்காரருக்கும் அவர்தம் போக்கை எதிர்ப்போருக்கும் இடையே மூண்டுவிட்ட மனப் போராட்டத்தின் தன்மையை உணரமுடியாமல், காட்டுமிராண்டிக் காலத்திலே இருந்தவர்கள் கூவியதைப்போல, எதிர்ப்பாளர்களை விட்டுவைப்பதா? ஒழிக்காமலிருப்பதா? ஒழித்துக் கட்டிவிடுகிறேன்— என ஒழிப்பதற்கான திட்டங்களையும் வேலைகளையும் வெகு வேகமாகச் செய்து வருகின்றனர்.

ஆதிக்க ஆசை, சுலபத்திலே மடியுமா! முதலிலே விதண்டாவாதிகள்—குதர்க்கவாதிகள்—நிரீஸ்வரவாதிகள் — கலகக்காரர்கள் — என்று சொன்னால் போதும் என்றுதான் எண்ணினார்கள்.

இப்போதோ, இதுகள் போடும் போடு, ஆதிக்கத்தின் அடிப்படையையே ஆட்டுவிக்கிறது — எனவே, இலேசாக அச்சம் தட்டிவிட்டது!

யார் சட்டை செய்வார்கள் என்று கேவலமாகப் பேசினவர்களே—இப்போது அச்சப்படுகிறார்கள்.

அச்சத்தின் காரணமாக, அழித்துவிடுவது, ஒழித்துவிடுவது, கணக்கைக் கட்டிவிடுவது என்ற கட்டத்துக்கு வந்திருக்கிறார்கள்—புருவத்தை நெளித்து, உதட்டைச் சிறிதளவு பிரித்து, "யார் பேசறா! சூனா மானாவோ? காக்கைக் கூட்டம் ஏராளமாக இருக்கும்! மனுஷா இருக்கமாட்டாளே" — என்று பத்தாண்டுகளுக்கு முன்பு கூடப் பரிகாசம் செய்த 'பரப்பிரம்மங்கள்!'

*

ஒழித்துக் கட்டிவிடப் போகிறோம் என ஓங்காரக் கூச்சலிடும் இவர்கள், என்ன பலனைக் காணப் போகிறார்கள்!

கொடுமையான சட்டங்களை வீச வீசத்தான், கழகத்தின், உரமும் திறமும் ஓங்கி வளர்கிறது!

அலட்சியப்படுத்தினார்கள் கழகம் வளர்ந்தது!

கேலி செய்தார்கள்—கழகம் வளர்ந்தது!

பழி சுமத்தினார்கள் — கழகம் வளர்ந்தது!

ஒவ்வொரு நாளும் கழக ஏட்டிலே, நாங்கள் எதைக் காண்கிறோம் "இன்ன ஊரிலே கழகத் தோழர் சிறை சென்றார் — இன்ன தோழர் விடுதலையானார்" என்ற செய்தியைத்தானே!

ஆறு தோழர்களைச் சுட்டுக்கொன்றாய், ஐயாயிரத்துக்குமேற்பட்ட கழகத் தோழர்களைச் சிறையிலே தள்ளினாய்!

தலைவர்களைச் சிறைக் கம்பிகளுக்குள்ளே வைத்திருக்கிறாய்!

பல தோழர்களை, வழக்குத் தொடராமலேயே சிறையில் பூட்டி வைத்திருக்கிறாய்!

இன்னும் என்னதான் செய்யப் போகிறாய்; அதையும் செய்து பார்த்து விடு — அந்த ஆசையும் தீர்ந்து போகட்டும்—ஆனால், விளக்கு அணையாது என்றுதான் நேர்வழி மறந்தவர்களுக்குக் கூறுகிறோம்.

பல புதிய சட்டங்கள் உண்டாக்கப்பட்டு, தாக்குதல் நடத்தினாலும், விளைவு ஒன்றுதான்—உயிர் போகும் —அவ்வளவுதான்!

இன்று நடைபெறும் அறிவுப் புரட்சித்துறைக் காரியம், உயிரைப் பற்றிய கவலையைக் கடந்தவர்களின் முயற்சி!—என்று உறுதியுடன் உரைக்கும் இளைஞர்கள், ஆயிரமாயிரம் கழகத்தில் உள்ளனர்.

தங்கள் நாட்களிலே செய்யப்படும் காரியம், பிற்கால சந்ததியாருக்காக, என்ற பெரு நோக்கம் கொண்டவர்களின் முயற்சி!

உடனடிப் பலனை எதிர்பாராமல் பணிபுரியும் பண்பினரின் முயற்சி!

உருட்டல் மிரட்டல்களுக்கு அஞ்சும் பஞ்சைகளல்ல!

சாபம், தூபம், இரண்டுக்குமே பயப்படாமல் துவக்கப்பட்ட முயற்சி!

கண்ணைத் தோண்டிய காலம், காதறுத்த காலம், கட்டிக் கொளுத்திய காலம் ஆகியவைகளைப் பற்றி, உலக வரலாறு ஏடுகளிலே படித்துப் படித்து, உள்ளத்தில் உரம் ஏற்றிக் கொண்டுள்ள ஊழியர்களின் முயற்சி!

பல செக்ஷன்களை வீசியோ, எடு வாளை என்று மிரட்டியோ அந்த முயற்சியை முறியடித்துவிட முடியாது.

மக்கள், எந்தக் கும்பலின் பேச்சுக்குச் செவி சாய்க்கமாட்டார்கள், என்று இவர்களால் கூறப்பட்டதோ, அந்த முயற்சியில் இவர்களும் தங்களை அறியாமல் இறங்க வேண்டியிருக்கிறது.

"தேசியப் போர்வையின் கீழ் தலைவிரித்தாடும், வகுப்பு ஜாதிப் பித்து இவற்றிற்கு ஆளாகாமல், மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

கோஷங்கள், மந்திரம், ஜால வித்தை, பிரார்த்தனை மூலம் எதையும் நாம் சாதிக்க முடியாது",

என்று பண்டித நேரு, நம்முடைய முயற்சிக்கு ஒத்துழைக்கும் முறையிலே பேசுகிறார். வகுப்பு, ஜாதிப் பித்து இவைகளை ஒழித்துக் கட்டும்படி சொல்லுகிறார்—இவை அங்கே அதிகமாக தாண்டவமாடுகிறது என்று அறிந்த காரணத்தால்.

அதுமட்டுமல்ல, பிரார்த்தனை மூலமும், மந்திரத்தின் மூலமும் எதையும் சாதிக்க முடியாது என்று தயக்கமின்றிக் கூறுகிறார்—பிரார்த்தனை மூலமும், மந்திரத்தின் மூலமும் எல்லாவற்றையும் சாதிக்கலாம் என எண்ணிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து.

எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் எங்கள் முயற்சி தோல்வியுறாது! வெற்றி பெற்றே தீரும்.

இதுவரை, நாங்கள் கூறிவந்தவைகளில் எதை நாடு ஏற்காது போயிற்று!

எங்கள் முயற்சியிலே உயிர்த்தன்மை இருக்கிறது. எனவே, அதை அழிக்கப்பார்ப்பது மடைமை, சொல்கிறோம்—சிந்தனைத் திறத்திலே மிச்ச மீதி இருக்கும் போதே, எண்ணிப் பார்க்கட்டும்.

சீறிப் போரிட்டு, நம்மை அழித்து ஒழித்தே தீருவதென்று சல்லடம் கட்டினால், அதையும் செய்து அவர்கள் ஆசையைத் தீர்த்துக் கொள்ளட்டும்.

துவக்கப்பட்டு, வேகமாக வளர்ந்து, தக்க வெற்றிகளைப் பெற்றுத் தந்த இயக்கம் அழிந்து விடாது. அது, அணையா விளக்கு!

யாருக்குக் கரி பூசுவது?

[சம்பந்தன்]

"ஒரு இடத்துக்குப் போவதானால், அந்த இடத்தில் நடக்கும் முறைக்குத் தக்கபடி நடக்க முடியுமானால், போக வேண்டும். இல்லையென்றால் வீட்டில் இருக்க வேண்டும். இதுதான் நாகரிகம்" என்பது, அன்பர் ஆச்சாரியார், சென்னையில் நடைபெற்ற காந்தி விழாவின்போது வெளியிட்ட பொன்மொழியாகும்.

இது, எதிர்க்கட்சித் தோழர்களுக்கு மட்டுமல்ல, காங்கிரஸ் கண்ணியவான்களுக்கும் கூடத்தான்.

நாகரிகத்தைப்பற்றி, நாடாளும் ஆச்சாரியார், காங்கிரசல்லாதாருக்குக் கூறிய வாசகமே ஒழிய—ஊருக்கு உபதேசமே ஒழிய—தமக்கல்ல என்பதை,'காங்கிரஸ் தோழர்கள், காரைக்குடியிலே நிரூபித்து விட்டார்கள்.

சிறை சென்று திரும்பிய தி. மு. க. தோழர்களுக்கு நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்திலே, காங்கிரஸ் காலிகள் புகுந்து குழப்பம் விளைவித்தார்கள்.

போலீசாரின் உதவியால் கூட அடக்க முடியாத குழப்பத்தை உண்டாக்கினர் — நாகரிகத்தைப் பற்றிப் பேசிய 'நல்லவரின்' சீடகோடிகள்.

இந்தச் செய்தியை, நாகரிகப் பாதையில் நடைபோடும் 'நாகல் நடை' 'தினமணி' 'ராஜாஜியின் வாக்கு பலித்தது' என்ற தலைப்பிட்டுத் தீட்டுகிறது.

நாகரிகப் பாதையில் நடக்கும்படி ஆச்சாரியார் கூறிய அடிச்சுவட்டை, அவர்தம் சீடகோடிகள், அணுவளவும் தவறாது கடைப் பிடித்து, நடை முறையில் காட்டி விட்டனர் என்ற களிப்புப் போலும், 'தினமணி'க்கு!

ஆச்சாரியாரின் சொல்லுக்கு அவமதிப்புத் தேடி, அவர்தம் சொல்லை ஆறிரண்டு தினங்களுக்குள் மறந்து காற்றிலே பறக்கவிட்டு விட்டு, ஆச்சாரியாரின் முகத்தில் கரி பூசுமளவுக்கு அவர்தம் சீடகோடிகள் நடந்து கொண்டனரே என்பதற்கு வெட்கப்பட்டு வேதனைப்பட வேண்டியதற்குப் பதிலாக, 'தி. மு. க. வினர் முகத்தில் கரி' என்று தீட்டுகிறது — தீட்டி, தன்னுடைய முகத்திலே கரியைப் பூசிக் கொள்கிறது—'தினமணி.'

'வாக்குப் பலித்தது'—என்று வர்ணிக்கிறது—'தினமணி.'

யார் வாக்குப் பலித்தது?

'ராஜாஜியின் வாக்குப் பலித்தது'

எப்படி?

'தி. மு. க. வினர் கூட்டத்தில் காங்கிரஸ் காலிகள் புகுந்து குழப்பம் செய்து, ஆச்சாரியார் கூறிய நாகரிகப்படி அவர்தம் பாதந்தாங்கிகள் நடந்து கொண்ட விதத்தால்—ஆச்சாரியாரின் வாக்கு பலித்தது.'

மேலும் தீட்டுகிறது:

"போலீசாரின் உதவியால் கூட குழப்பத்தை அடக்க முடியவில்லை. அப்படியும் ஸ்ரீ கோவிந்தசாமி தம் பேச்சை நிறுத்திக் கொள்ளவில்லை. விடாமல் பேசினார். 'ராஜாஜி, பஜகோவிந்தம் பஜகோவிந்தம்' என்று பேசுகிறார். ஆனால், நாட்டிலோ புயலும், கடுங்காற்றும் மட்டுமே அடிக்கின்றன. மழை பொழிவதாகக் காணோம்! என்று தெரிவித்தார். உடனே மட மடவென மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. அதுவும் சாதாரண மழையல்ல. பலத்த மழை. கூட்டத்திலிருந்து, 'பஜகோவிந்தம் ராஜாஜி வாழ்க' என்ற கோஷம் வானைப் பிளந்தது"

என்று களிப்புக் கடலிலே மிதந்த வண்ணம் தீட்டியிருக்கிறது—'தினமணி.'

இதுவரையிலே, ஆச்சாரியாரின் பஜகோவிந்தப் பாராயணத்தை, தி. மு. க. வினர் பாராட்டியா பேசி வந்தனர். அப்பொழுதெல்லாம் பெய்யாத மழை, அன்று மட்டும் பெய்யக் காரணமென்ன?

கால மழை நாடெங்கும் பெய்திருக்கிறது—அந்தச் செய்தியை 'தின மணி'யே வெளியிட்டுமிருக்கிறது. அதுபோலவே, காரைக்குடியிலும் மழை பெய்திருக்கிறது — இதிலென்ன, 'வாக்குப் பலிக்கும்' வகையான ஆச்சர்யம்!

பஜகோவிந்த ஆச்சாரியாரும், அவர் தம் அடிவருடிகளும் அனந்த கோடிமுறை பஜகோவிந்தப் பாராயணம் பாடியும் பெய்யாத மழை அன்று மட்டும் பெய்யக் காரணமென்ன?

பஜகோவிந்தத்தைப் பக்தி சிரத்தையோடு பக்தகோடிகள் பாராயணம் செய்யவில்லையா? அப்பொழுதெல்லாம் பஜகோவிந்தம் பலிக்கவில்லையே—பலிக்காத காரணம்? கூறுமா—திரித்துக் கூறும் தன்மையைத் தனதெனக் கொண்டிருக்கும் —'தினமணி'.

மழை தேவையில்லை என்று, எப்பொழுது யார் கூறினார்கள்?

'பஜகோவிந்தம் பாடினால் பலன் உண்டு' என்று அங்கிங்கெனாதபடி எங்கும் பறைசாற்றிவரும் ஆச்சாரியார் ஆட்சியிலே ஏன் மழைபெய்யவில்லை என்று தோழர் கோவிந்தசாமி கேட்டிருக்கிறார். அந்தச் சமயத்தில் காலமழை பெய்திருக்கிறது —இதிலே 'வாக்கு பலிக்கும்' விநோதம் எங்கே புதைந்து கிடக்கிறது?

பஜகோவிந்தம் பாடியும் மழை இல்லை என்ற உடனே, மழை மட மடவெனப் பெய்தது — அதனால் 'ஆச்சாரியார் வாக்குப் பலித்தது' என ஆனந்தப் பண்பாடும் 'தினமணி' — பஜகோவிந்தம் பாடியும் பாட்டாளியின் துயர் தீராதது ஏன்? பட்டினிச் சாவுகள் ஏற்படுவது ஏன்? மாடுகளுக்குப் பதில் மனிதனை ஏரில் பூட்டி உழும் பரிதாபச் செய்தியை பத்திரிகைகளில் படம்போட்டு காட்டுமளவுக்கு நாடு வந்ததேன்? அந்தத் தொழிலுக்கே நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டுவரும் வறுமை நிலை ஏன்?

—என்பவைகளுக்குப் பதில் தருமா அந்த 'மணி' எனக்கேட்கிறோம்.

அதற்குப் பதில் 'தினமணி' கூறுவிட்டாலும், நேரு பண்டிதர் கூறிய நேர்மையான வாசகத்தை 'தினமணி'யார் ஓய்வு இருக்கும் போது மனதில் பதியவைத்துக் கொள்ளட்டும்.

“பிரார்த்தனைமூலம் எதையும் சாதிக்க முடியாது”

என்ற பண்டிதரின் வாக்குக்குப் பதில் தருமா 'தினமணி'

'தினமணி'யார் தரவேண்டாம் பதில்— பஜகோவிந்தப்பிரியர் அன்பர் ஆச்சாரியார்தான் தருவாரா?

இப்படி, அந்தக் கூடாரத்துக்குள்ளேயே, 'பஜகோவிந்தம் பாடு,பலன் கிடைக்கும்' என்று ஒரு கூட்டமும் 'பஜகோவிந்தத்தால் பலன் இல்லை' என்று மற்றொரு கூட்டமும் கூறி வரும்பொழுது, 'தி. மு. க. வினர் முகத்தில் கரி' என்று எழுதும் 'தினமணி'க்கே, யார் முகத்தில் கரியைப் பூசுவது என்ற பொறுப்பைத் தந்துவிடுகிறோம்.

பஜகோவிந்தத்தால் பலன் தவறாது கிட்டும் என்ற தளராத நம்பிக்கை, பஜகோவிந்தப் பிரியர்களுக்கும், 'தினமணி'யாருக்கும் இருக்குமேயானால், “பாரத புத்ரர்களே! பஜகோவிந்தமே பாடுங்கள், வேறு வேலை தேவையில்லை” என்று பஜகோவிந்த ஆச்சாரியாரே ஒரு சட்டம் கொண்டுவந்து விடலாமே!

சட்டம் கொண்டுவர யாருடைய தயவும் தாட்சண்யமும் அவருக்குத் தேவையில்லையே — அவர்தான் சங்கரர், இராமானுஜர் பரம்பரையைச் சேர்ந்தவராயிற்றே!

நாட்டிலே, பஜகோவிந்தம்மட்டுமா செய்கிறார்கள். பல்லாயிரம் தேவர்களில் யாரை பஜனை செய்யாமல் மறந்திருக்கிறார்கள் 'பாரத புத்ரர்கள்!'

இன்றும் திருப்பதிக்குச்சென்று திருமொட்டை அடித்து, திருநாமம் சாத்திக்கொள்ளாதவர்கள் எத்தனை பேர்? பழனி பஞ்சாமிர்தத்தைப் பார்சலில் பெற்றுப்பருகி, அவன் பெருமை பாடாத பக்தர்கள் எத்தனை பேர்?

தங்கத்தால் செய்யப்பட்ட வேலைச் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு, வெள்ளித் தீவட்டி பிடிக்கும் 'விவேகிகள்' எத்தனை பேர்?

இப்படிப் பலர் புகழ் பாடி, பல பஜனை செய்தும்கூட, இந்நாட்டின் இழிநிலை போகாததேன்?—எண்ணி—சிந்தித்தனரா பஜகோவிந்தப்பிரியர்கள்—இனியேனும் சிந்திப்பார்களா 'தினமணியும் அவர்தம் குழாங்களும்.

'வாக்குப் பலித்தது' என்று வர்ணித்துத் தீட்டும் 'தினமணி' — எவருடைய வாக்குப் பலித்தது என்று எக்களிப்போடு எழுதுகிறதோ, அந்த ஆச்சாரியாரின் வாக்கை, அவர்களின் சீடகோடிகள், காற்றில் பறக்கவிட்டதேன்!

“துவேஷத்தையும், வெறுப்புணர்ச்சியையும் தூண்டுபவர்களின் பேச்சைக் கேட்காதீர்கள்; அவர்களின் கூட்டங்களுக்குப் போகாதீர்கள்; அவர்களின் பிரசுரங்களில் என்ன எழுதியிருக்கிறது என்பதைக்கூட அறிய ஆவல் காட்டாதீர்கள்; அது பாம்புக்குப் பாலூட்டுவதாகும்.”

என்று அன்பர் ஆச்சாரியார் கூறியிருந்தும்கூட, “வானைப் பிளக்கும்படி, கூட்டத்திலிருந்தவர்கள் 'பஜகோவிந்தம் ராஜாஜி வாழ்க' என்று கோஷித்தனர்” என்றால், வானைப் பிளக்கும் அளவுக்குக் கோஷமிடும் காங்கிரஸ் தோழர்கள், ஏன் தி. மு. க. வினர் கூட்டத்திற்கு வந்திருந்தனர்?

அத்தனை பேரும் ஆச்சாரியாரின் 'வாக்கை' அவமதித்ததேன்?—துச்சமென எண்ணித் தள்ளியது ஏன்?

ஆச்சாரியாரின் 'வாக்கு'க்கு அவர்தம் பக்தகோடிகளே பணியவில்லை என்றால், இயற்கை பணிந்து மழை பெய்தது என்று கூறுமளவுக்கு 'தினமணி' தீட்டிக் காட்டுவதன் காரணம் என்ன?

இன்னும் 'இளித்த வாயர்கள்' இந்த நாட்டிலே இருக்கிறார்கள் என்ற துணிவு தவிர, இதற்கு வேறென்ன காரணம் இருக்க முடியும்?

இல்லையென்றால், தி. மு. க. வினர் கூட்டத்தில், புகுந்து, குழப்பம் விளைவித்துக் கூட்டத்தைக் கலைத்துவிட்டால், தி. மு. க. வினர் ஒழிந்துவிடுவார்கள்—இதுதான், தி. மு. க. வினரைஒழித்துக்கட்டும் திருப்பணி—இதைத்தான் ஆச்சாரியார் கூறினார்—எனவே, அவர் வாக்குப்பலித்தது என்று 'தினமணி' தீட்டுகிறதா?

இல்லையெனில், ஆச்சாரியாரின் 'வாக்'குக்கும்தோழர்கோவிந்தசாமி எம். எல். ஏ. யின் பேச்சுக்கும் என்ன சம்பந்தம்?

'வாக்குப்பலித்தது'என்றுவரிந்து தலைப்பு தீட்டியிருக்கிறது, 'தினமணி'

எந்த விதத்திலே வாக்குப் பலித்தது?

தி. மு. க. கூட்டத்தில் குழப்பம் விளைவித்து, தி. மு. க. வினரை ஒழித்துக் கட்டும் பணியை மேற்கொண்ட வாக்கு பலித்ததென்றால்—ஆச்சாரியார் கூறிய நாகரிகத்திற்கு அப்பாற்பட்டதாகும் என அறிவுறுத்துகிறோம்.

பஜகோவிந்தத்தால் மழை பொழியக் காணோம் என்று கூறியவுடனே மழை பெய்தது என்பதால் ஆச்சாரியார் வாக்குப் பலித்ததென்றால்- அதுவும் தவறு, இதுவரை கூறிய போது பெய்யாத மழை அன்றுமட்டும் பெய்யக் காரணம் — பருவ மழையே ஒழிய, ஆச்சாரியாரின் வாக்குப்பலிக்கவில்லை—மழை பெய்ய வேண்டுமென அங்கு யாரும்பஜகோவிந்தம் பாடவில்லை. பலத்த மழை பெய்த பிறகே, 'பஜகோவிந்தம் ராஜாஜி வாழ்க' என்ற கோஷம் வானைப் பிளந்தது. எனவே, ஆச்சாரியாரின் 'வாக்குப் பலிக்கும்' வகைக்கு வழியே காணோம்.

என்றாலும், ஆச்சாரியாரின் வாக்குக்கு வன்மை தேடித்தரும் திருப்பணியை மேற்கொண்டிருக்கும் 'தினமணி'யார் 'வாக்குப் பலித்ததின்' வகையினைக் கூறுவாரா?

கூற முடியாவிட்டால், குத்திக்கிளறி குதர்க்கத்தை உண்டு பண்ணும் கோணல் புத்தியினையாவது விட்டொழித்துநாட்டைவேட்டைக் காடாக்கும் வேதனை நிலையில் இழுத்துச் செல்லாமல், பஜகோவிந்தம் ஆச்சாரியார் கூறும் நாகரிகரிகத்தை மேற்கொண்டு அதன்படி நடந்து கொள்ளட்டும்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.